பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2032 கார்த்திகை 21 வியாழக்கிழமை (06-12-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:11



# வடக்கில் - கூட்டமைப்பு!

# தெற்கில் - ஐ.தே.கட்சி!!

## வெற்றியை நோக்கி வீறுநடை

யாழ்ப்பாணம்,டிசெம்பர்6

**நேற்று நடந்த பன்னிரண்டாவது பொதுத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் நான்கு கட்சித் தமிழ்க் கூட்டமைப்பும் தென்னிலங்கையில் ஐக்கிய தேசியக் கட்சியும் பெரு வெற்றியீட்டியிருக்கின்றன.**

யாழ்.மாவட்டத்திலுள்ள பதினொரு தேர்தல் தொகுதிகளில் தீவகத்தின் ஊர்காவற்றுறைத் தொகுதி தவிர்ந்த ஏனைய பத்துத் தொகுதிகளிலும் தமிழர் விடுதலைக் கூட்டணி அமோக வெற்றியீட்டியுள்ளது.

நான்கு கட்சித் தமிழ்க் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்களில் தமிழ்க் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மூவருக்கும் அதிக எண்ணிக்கையில் விருப்பு வாக்குகள் கிடைத்திருப்பதாக முதலில் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

எனினும், ஒவ்வொரு வேட்பாளர்களினதும் விருப்பு வாக்குகள் எண்ணிக்கை பற்றிய விவரமும் நாடாளுமன்றுக்குத் தேர்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் யார் யார் என்ற விவரமும் அனேகமாக இன்று மாலை வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தென்னிலங்கையில் -

எதிர்பார்க்கப்பட்டபடி - அனேக தொகுதிகளில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றிநடை போடுவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கிடைக்கும் பெறுபேறுகளின் போக்குகளைப் பார்க்கும்போது ஐக்கிய தேசியக் கட்சி, சுமார் 120 ஆசனங்களை - தேவையான அறுதிப் பெரும்பான்மையை - பெறும் என்று ஐ.தே.கட்சியின் உயர் வட்டாரங்கள் இன்று காலை நம்பிக்கை வெளியிட்டன. (உ-ம-10)

### யாழ்.மாவட்ட நிலைமை

| | | |
|---|---|---|
| தமிழர் கூட்டணி | - | 6 |
| ஈ.பி.டி.பி. | - | 2 |
| ஐ.தே.கட்சி | - | 1 |

யாழ்ப்பாணம்,டிசெம்பர்6

யாழ்.மாவட்டத்தில் இருந்து தெரிந்தெடுக்கப்படும் ஒன்பது எம்.பிக்களில் ஆறு இடங்கள் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் இரண்டு இடங்கள் ஈ.பி.டி.பிக்கும் ஐ.தே.கட்சிக்கு ஓர் இடமும் கிடைத்திருப்பதாக இன்று காலையில் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

எனினும் யாழ்.மாவட்டத்திலிருந்து இடம் பெயர்ந்து புத்தளம் மற்றும் கொழும்பில் வசிக்கும் மக்களின் வாக்குகளின் விவரம் யாழ்.செயலகத்துக்கு இன்று விடியும் வேளைவரை கிடைக்கவில்லை. அது கிடைக்கும் போது இம்முடிவுகளில் மாற்றம் ஏற்பட வாய்ப்புகள் உண்டு என்றும் -

தமிழர் கூட்டணியின் உறுப்பினர்களின் எணிக்கை ஒன்று குறைந்து, ஈ.பி.டி.பி. சார்பில் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை இரண்டிலிருந்து மூன்றாக அதிகரிக்க வாய்ப்பு ஏற்படும் என்றும் -

ஐ.தே.கட்சிக்கு ஓர் ஆசனம் கிடைக்கும் நிலையில் மாற்றம் இருக்காது என்றும் - தெரிவிக்கப்பட்டது. (உ-ம-10)

### தபால் வாக்களிப்பிலும் தமிழர் கூட்டணி முன்னணி

யாழ்ப்பாணம்,டிசெ.6

யாழ்.மாவட்டத்தின் தபால் மூல வாக்களிப்பு முடிவு நேற்று முன்னிரவு வெளியானது.

தபால் மூல வாக்களிப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணி அமோக வெற்றியீட்டியிருக்கிறது.

வாக்கு எண்ணிக்கை வருமாறு:-

| | | |
|---|---|---|
| த.வி.கூட்டணி | - | 1496 |
| ஈ.பி.டி.பி. | - | 576 |
| ஐ.தே.க. | - | 172 |
| புளொட் | - | 24 |
| சுயேச்சைக்குழு (வரதர் அணி) | - | 20 |

(08ஆம் பக்கம் பார்க்க)

### 2மணி வரை ஊரடங்கு நீடிப்பு

கொழும்பு,டிசெ.6

நேற்று வாக்களிப்பை அடுத்து நாடுமுழுவதும் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட ஊரடங்குச் சட்டம் இன்று பிற்பகல் 2மணி வரை நீடிக்கப்பட்டிருப்பதாக பொலீஸ் தலைமையகம் அறிவித்திருக்கிறது.

(08ஆம் பக்கம் பார்க்க)

### 'உதயன்' இணையத்தளத்திலும் தேர்தல் முடிவுகள்

நேற்று நடைபெற்ற பொதுத் தேர்தலின் முடிவுகள் இன்று அதிகாலை முதல் 'உதயன்' இணையத் தளம் ஊடாகவும் உடனுக்குடன் வெளியிடப்பட்டு வருவதை வாசகர்களுக்கு அறியத்தருகின்றோம்.

'உதயன்' இணையத்தள முகவரி: www. uthayan. com.

## திருமலை மாவட்டத்திலும் கூட்டணி முன்னணியில்!

திருகோணமலை,டிசெ.6

திருகோணமலை மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி அதிக வாக்குகளைப்பெற்று முன்னணியில் நிற்கின்றது.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள மூன்று தொகுதிகளுள் ஒன்றான திருகோணமலை நகரத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி 25 ஆயிரத்துக்கும் அதிகமான வாக்குகளையும் ஐ.தே.கட்சி ஏழாயிரம் வாக்குகளையும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி நாலாயிரம் வாக்குகளையும் பெற்றிருப்பதாக முற்கொண்டு கிடைதத செய்திகள் தெரிவித்தன.

மற்றொரு தொகுதியான சேருவில தொகுதியில் ஐ.தே.கட்சிக்கு எண்ணாயிரமும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு ஆறாயிரமும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு 591 வாக்குகளும் கிடைத்துள்ளன.

மூதூர் தொகுதி முடிவுகள் இன்னும் கிடைக்கவில்லை. எனினும் மூதூர் தொகுதியில் இம்முறை தமிழர்கள் சுறுசுறுப்பாக பங்குபற்றியதால் அங்கும் ஐ.தே.கட்சிக்கு சரிக்குச் சமமாக தமிழர் விடுதலைக் கூட்டமைப்பு வாக்குகளைப் பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த பொதுத் தேர்தலில் தமிழ்க் கட்சிகள் தனித்தனியாகப் போட்டியிட்டதில் தமிழர்களின் வாக்குகள் பிரிந்து, திருகோணமலையில் தமிழ்ப் பிரதிநிதித்துவம் இல்லாமல் போனது குறிப்பிடத்தக்கது. (உ)

### மட்டக்களப்பிலும் கூட்டமைப்பு வெற்றிநடை

மட்டக்களப்பு,டிசெ.6

மட்டக்களப்பு தேர்தல் மாவட்டத்திலும் தமிழர் கூட்டமைப்பு முன்னணியில் உள்ளது. அங்கு கூட்டமைப்புக்கு 3 ஆசனங்கள் கிடைப்பது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது.

இன்று அதிகாலை கிடைத்த தகவல்களின்படி மட்டக்களப்பில் கூட்டமைப்புக்கு அடுத்தபடியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஓர் ஆசனத்

(08ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.மாவட்டத்தில் கட்சிகளின் நிலை

யாழ்ப்பாணம்,டிசெ.6

இன்று அதிகாலை கிடைத்த உத்தியோகப்பற்றற்ற முடிவுகளின் படி யாழ்.மாவட்டத்தில் தொகுதி ரீதியாகக் கட்சிகள் பெற்ற வாக்குகளின் எண்ணிக்கை விவரம் வருமாறு

**யாழ்ப்பாணம்**

| | |
|---|---|
| ★ த.வி.கூ. | - 7,376 |
| ★ ஈ.பி.டி.பி. | - 3,644 |
| ★ ஐ.தே.க. | - 947 |

**நல்லூர்**

| | |
|---|---|
| ★ த.வி.கூ. | - 11,789 |
| ★ ஈ.பி.டி.பி. | - 4,565 |
| ★ ஐ.தே.க. | - 1,975 |

**வட்டுக்கோட்டை**

| | |
|---|---|
| ★ த.வி.கூ. | - 9,803 |
| ★ ஈ.பி.டி.பி. | - 4,600 |
| ★ ஐ.தே.க. | - 3,436 |

**மானிப்பாய்**

| | |
|---|---|
| ★ த.வி.கூ. | - 13,539 |
| ★ ஈ.பி.டி.பி. | - 7,450 |
| ★ ஐ.தே.க. | - 1,999 |

**சாவகச்சேரி**

| | |
|---|---|
| ★ த.வி.கூ. | - 9,862 |
| ★ ஈ.பி.டி.பி. | - 2,220 |
| ★ ஐ.தே.க. | - 1,212 |

**ஊர்காவற்றுறை**

| | |
|---|---|
| ★ ஈ.பி.டி.பி. | - 15,370 |
| ★ த.வி.கூ. | - 4,660 |
| ★ ஐ.தே.க. | - 764 |

**உடுப்பிட்டி**

| | |
|---|---|
| ★ த.வி.கூ. | - 12,254 |
| ★ ஈ.பி.டி.பி. | - 4,218 |
| ★ ஐ.தே.க. | - 1,505 |

**பருத்தித்துறை**

| | |
|---|---|
| ★ த.வி.கூ. | - 8,525 |
| ★ ஈ.பி.டி.பி. | - 2,736 |
| ★ ஐ.தே.க. | - 1,264 |

**கிளிநொச்சி**


| | |
|---|---|
| ★ த.வி.கூ. | - 1,100 |
| ★ ஈ.பி.டி.பி. | - 430 |
| ★ ஐ.தே.க. | - 191 |

**காங்கேசன்துறை**

| | |
|---|---|
| ★ த.வி.கூ. | - 8,862 |
| ★ ஈ.பி.டி.பி. | - 5,580 |
| ★ ஐ.தே.க. | - 1,242 |

**கோப்பாய்**

| | |
|---|---|
| ★ த.வி.கூ. | - 12,539 |
| ★ ஈ.பி.டி.பி. | - 6,300 |
| ★ ஐ.தே.க. | - 1,755 |



நேற்றைய வாக்களிப்பில் ஆண்களை விடப் பெண்களே சுறுசுறுப்பாகக் கலந்துகொண்டதை அவதானிக்க முடிந்தது.

கந்தர்மடம் சைவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் வாக்களிக்க வந்திருந்த பெண்கள் கூட்டத்தையும் வயோதிபப் பெண் ஒருவர் வாக்குப் பெட்டிக்குள் வாக்கைச் செலுத்துவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: பொ.இராஜேஸ்வரன்)

# குடாநாட்டில் மழைக்கு மத்தியில் மக்கள் உற்சாகமாக வாக்களிப்பு!

யாழ்ப்பாணம்,டிசெ.6

நேற்று குடாநாட்டில் பெய்த மழையின் மத்தியிலும் 12 ஆவது நாடாளுமன்றத்துக்கான தமது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க குடாநாட்டு மக்கள் உற்சாகமாக வாக்களித்தனர். கடந்த தேர்தலைவிட இந்முறை மக்கள் வாக்களிப்பில் அதிகம் ஆர்வம் காட்டினர்.

காலையில் வாக்களிப்பு மந்தகதியில் இருந்தபோதும், முற்பகலின் பின்னர் சூடுபிடித்தது.

நேற்று முற்பகல் தொடக்கம் மாலையில் வாக்களிப்பு நேரம் முடியும்வரை குடாநாட்டில் பரவலாக மழைபெய்து கொண்டே இருந்தது.

எனினும் மழையைப் பொருட்படுத்தாது முதியவர்களும், பெண்களும் அதிகளவில் வந்து வாக்களித்தனர்.

இதேவேளை -

கூட்டங்கூட்டமாக மக்கள் வாகனங்களில் கொண்டுவந்து இறக்கப்பட்டு, வாக்காளர் அட்டைகள் வழங்கி அவர்கள் வாக்குச்சாவடிக்கு அனுப்பப்பட்டதையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

பல வாக்குச்சாவடிகளில், தமது சொந்த வாக்காளர் அட்டைகளுடன் சென்ற பலர் அவர்களது வாக்குகள் ஏற்கனவே அளிக்கப்பட்டிருந்ததால் வாக்களிக்கமுடியாது ஏமாற்றத்துடன் திரும்பியதையும் காணமுடிந்தது.

வாக்குச் சாவடிகளில் பணியாற்றிய அதிகாரிகள் பெரும்பாலும் வாக்களிப்பவர்களை உறுதிப்படுத்துவதில் அசிரத்தையாக இருந்ததாகப் பொது மக்கள் தரப்பில் முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டன.

இடம்பெயர்ந்த மக்கள் வாக்குச் சாவடிகளுக்குச் செல்ல வசதியாக வடபிராந்தியப் போக்குவரத்துச் சபை 84 பஸ்களை நேற்று இலவச சேவையில் ஈடுபடுத்தியிருந்தது.

(ஓ-4-6-8-9-10-29-133-152-173-180)

## ஒன்றுகூடல்

வலி.தெற்கு,டிசெ.6

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தின் கீழ், உடுவில் கிழக்கில் இடம்பெற்றுவரும் பாலர் பாடசாலை மாணவர்களின் ஒன்றுகூடல் நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு க.சிவனேசப் தலைமையில் பாலர் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

விவாகப் பதிவாளரும் சுன்னாகம் ப.நோ.கூ. சங்கத் தலைவருமான சி.குமாரவேல் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார்.

டாக்டர் ம.மகேசன், செ.சிவராசா ஆகியோர் சிறப்புவிருந்தினராகக் கலந்துகொள்கிறார்கள். (ஐ-152)

## வாகனம் மீது தாக்குதல்:

# கண்டியில் ஏழு முஸ்லிம்கள் நேற்று மாலை சூட்டுக்குப் பலி!

கொழும்பு,டிசெ.6

நேற்று மாலை 5.30 மணியளவில் கண்டி மாவட்டம் கட்டுகஸ்தோட்டப் பகுதியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் சென்றுகொண்டிருந்த வாகனம் ஒன்றின் மீது இனந்தெரியாதோர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் 7 பேர் கொல்லப்பட்டனர்; மேலும் சிலர் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் உடனடியாகக் கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து அப்பகுதியில் நேற்று இரவுவரை பதற்றம் நிலவியது.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டிருப்பதாகவும் -

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் நடவடிக்கைக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் எனவும் -

பொலீஸார் தெரிவித்தனர்.

கண்டி மற்றும் புத்தளம் பகுதிகளில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவின் ஆதரவாளர்கள் முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள்மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிடுவதற்குத் திட்டமிட்டு வருவதாகவும் -

தேர்தல் தினத்தன்று அங்கு பெரும் இரத்த ஆறு ஓடக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதால் அங்கு பாதுகாப்பை அதிகரிக்குமாறும் -

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் கடந்த வாரம் முறையிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஐ-4-6-9)

# குடாநாட்டில் நேற்று 35 வீத வாக்குப் பதிவு

யாழ்ப்பாணம்,டிசெ.6

நேற்று நடைபெற்ற பொதுத்தேர்தலில் நாடு முழுவதும் 75 வீதம் தொடக்கம் 80 வீதமான வாக்காளர்கள் வாக்களித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் நடைபெற்ற பொதுத்தேர்தல்களிலும் பார்க்க இந்த முறை பொதுத்தேர்தலில் வாக்காளர்கள் ஆர்வத்துடன் வாக்களிப்பில் ஈடுபட்டதாக தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

குடாநாட்டில் 33 முதல் 35 சதவீத வாக்குப் பதிவு இடம்பெற்றிருப்பதாக யாழ்.தெரிவத்தாட்சி அலுவலகம் நேற்றிரவு தெரிவித்தது.

ஆகக் கூடுதலாக நெடுந்தீவில் 80 சதவீத வாக்குப் பதிவு இடம்பெற்றிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது.

(ஐ-ம-4-6-9-10)

# பல்கலை விரிவுரையாளர் தாக்கப்பட்டுப் படுகாயம்!

## கந்தர்மடத்தில் நேற்று மாலை சம்பவம்

யாழ்ப்பாணம்,டிசெ.6

யாழ்பல்கலைக்கழகத்தில் இருந்து நேற்று மாலை வீடு திரும்பிக்கொண்டிருந்த விரிவுரையாளர் ஒருவரும் அவரது சகோதரரான பல்கலைக்கழக மாணவனும் கந்தர்மடத்தில், பழம் வீதியில் வைத்து வன்முறைக் கும்பல் ஒன்றினால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் இந்த வீதிவழியாக மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த சமூகவியல்துறை விரிவுரையாளர் அன்ரனி எட்மன் றிச்சேட் (வயது 29, மாட்டீன் லேன், மடம் வீதி, யாழ்ப்பாணம்) என்பவரும் அவரது சகோதரரான அன்ரனி அனஸ்ரீன் றோஜ் (வயது 22) என்ற முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட 2ஆம் வருட மாணவனுமே வழிமறிக்கப்பட்டு கடுமையாகத் தாக்கப்பட்டனர்.

வாகனம் ஒன்றில் வாள்கள் மற்றும் இரும்புக் கம்பிகள், கொட்டன்களுடன் வந்த சுமார் 30 இளைஞர்கள், தம்மை வழிமறித்துத் தாக்கியதாகக் காயமடைந்தவர்கள் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் அவர்கள் பயணம் செய்த மோட்டார் சைக்கிளும் சேதமடைந்தது.

காயமடைந்த இருவரும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

(ஐ-ஓ-6-9)

## பிரதேச செயலக ஜெனரேட்டர் அபகரிப்பு

வலிகாமம் தெற்கு,டிசெ.6

வலிகாமம் தெற்கு பிரதேச செயலகத்தின் பாவனையில் இருந்த மின் பிறப்பாக்கி (ஜெனரேட்டர்) களவாடப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இச்சம்பவம் இடம்பெற்றது.

சுமார் ஒரு லட்சத்து 85 ஆயிரம் ரூபா பெறுமதியான இந்த ஜெனரேட்டர் வைக்கப்பட்டிருந்த அறைக்கதவு உடைக்கப்பட்டு, களவாடப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை சுன்னாகம் பொலீஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ-52)

# மகேஸ்வரனின் வாகனத்தை வழிமறித்துத் தாக்க முயற்சி

யாழ்ப்பாணம்,டிசெ.6

நேற்றுப் பிற்பகல் திருநெல்வேலி வளாகச் சந்திப் பகுதியில் வன்முறைக் கும்பல் ஒன்றின் தாக்குதல் முயற்சியிலிருந்து ஐ.தே.க. முதன்மை வேட்பாளர் தி.மகேஸ்வரன் தப்பினார்.

எட்டு மோட்டார் சைக்கிள்களில், சைக்கிள் செயின்கள், விக்கெட், பொல்லுகள் சகிதம் வந்த 15பேரும் மற்றும் வாள்கள், தடிகள் இரும்புக் கம்பிகள் ஆகியவற்றுடன் வாகனம் ஒன்றில் வந்த சுமார் 10 பேரும் நல்லூர் சிவன்கோயில் பகுதியில் வைத்து அந்த வழியாக மகேஸ்வரன் வந்த வாகனத்தை மறித்ததாகக் கூறப்படுகிறது.

அவர்களின் பிடியில் இருந்து சமயோசிதமாகத் தப்பிய மகேஸ்வரன் பின்னர் அங்கிருந்து கோயில் வீதி, சிவன்வீதி, வழியாக பலாலி வீதியில் உள்ள தனது இல்லத்தை நோக்கி வாகனத்தைச் திருப்பிச் செலுத்தினார். அவரது வாகனத்தை விடாது பின்தொடர்ந்து துரத்திவந்த அந்தக் கும்பல் வளாகச் சந்திப் பகுதியில் வைத்து மீண்டும் அவரைத் தாக்க முயன்றிருக்கிறது.

உடனடியாக மகேஸ்வரன் அருகில பலாலி வீதி - பழம் வீதிச் சந்தியில் அமைந்திருக்கும் படையினரின் சோதனைச் சாவடிக்குள் நுழைந்து பாதுகாப்புத் தேடியதாகக் கூறப்படுகிறது. உடனடியாக அங்கு குவிந்த இராணுவத்தினரும் பொலீஸாரும் அந்த வன்முறைக்கும்பலை துரத்தியடித்து விரட்டியதாகத் தெரிவிக்கப்பட்டது.

வன்முறைக்கும்பல் தாக்கியதில் மகேஸ்வரனின் வாகனம் சேதமடைந்தது.

இந்தச் சம்பவம் நடந்த சிறிது நேரத்தின் பின்னர் வாள், கத்தி, பொல்லு சகிதம் மகேஸ்வரனின் வீட்டை நோக்கி வந்த மற்றொரு கும்பல் திருநெல்வேலிப் பகுதியில் வைத்துப் படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவங்களால் திருநெல்வேலி, கந்தர்மடம் பகுதிகளில் நேற்று மாலை பதற்றம் நிலவியது.

மகேஸ்வரனின் இல்லம் அமைந்துள்ள பலாலி வீதிப் பகுதியில் நேற்றிரவு கூடுதலான பொலீஸாரும் படையினரும் நிறுத்தப்பட்டிருந்தனர்.

(ஐ-ஓ-4-6-79)


திருமண வாழ்வின் வெள்ளி விழாத் தம்பதியினரை வாழ்த்துகின்றோம்

பாலும் பழமும் பனிப்பாகும்
தேனுமிவை நாலும் கலந்த நயம்போல
கோலமயில் போலும் இரத்தினகுமாரியை
சிவஞானமாம் ஏற்று
இருபத்தி ஐந்து ஆண்டுகளாம்,
மேலும் பல்லாண்டு சீருடன் வாழ
வாழ்த்துகின்றோம்.

ஞானவீர சிக்கன கூட்டுறவுச் சங்கத் தலைவரும், ஞானவீர சனசமூக நிலைய உப தலைவரும், யாழ்.ப.நோ.கூ.சங்க பதிப்பக முகாமையாளருமாகிய கோண்டாவில் மத்தியைச் சேர்ந்த

**சிவஞானம், இரத்தினகுமாரியுடன்**

இணைந்த நல்லறமாகிய இல்லற வாழ்வின் 25 ஆண்டு நிறைவு நாளில் (06-12-2001) இருவரும் வளமெல்லாம் நிறைந்து மகனுடன் பல்லாண்டு காலம் நலமாய் வாழ பாராட்டி வாழ்த்துகின்றோம்.

நிர்வாகத்தினர்,
ஞானவீர சனசமூக நிலையம்,
(C/19666) புகையிரத நிலைய வீதி, கோண்டாவில்.



45 ஆம் நாள் நினைவஞ்சலி

முத்துலிங்கம் வாணிதாசன்



தோற்றம் 22.11.1969
மறைவு 23.10.2001

ஆத்மா சாந்தி பெறுவதாக!

தலைவர், செயலாளர், பொருளாளர்
மற்றும் அங்கத்தவர்கள், -
செவிப்புலனற்றோர் புனர்வாழ்வு நிறுவனம்.
16/2, சீனியர் லேன்,
கலட்டி, யாழ்ப்பாணம்.
(95668)



கண்ணீர் அஞ்சலி

எமது கல்வி நிலையத்தின் மூத்த விஞ்ஞான ஆசிரியர்
திரு.ச.லலீசன் அவர்களின் அன்புத் தந்தையார்

**இளையதம்பி சந்திரமௌலீசன்**

(ஓய்வுபெற்ற பிரதம லிகிதர், நகரசபை - சாவகச்சேரி)

அவர்களின் மறைவினால் துயரில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நெல்லியடி,
இணுவில். (95670)
எக்சலன்ற் கல்வி நிலையம்.



மரண அறிவித்தல்

**திருமதி நடராசா அருந்ததி**

(சத்தியா அன் கோ, யாழ்ப்பாணம்)

மாதகலைப் பிறப்பிடமாகவும் தற்போது கலைமகள் வீதி, கல்வியங்காட்டில் வசித்து வருபவருமாகிய நடராசா அருந்ததி நேற்று (05.12.2001) புதன்கிழமை காலமானார்.

அன்னார் நடராசாவின் அன்பு மனைவியும் சரவணமுத்து - செல்லமுத்து தம்பதியினரின் மகளும், தயாவதி, ரஞ்சன் (கனடா), குமார், சேகர் (ஜேர்மனி), நந்தினி (ஜேர்மனி), சுதாகர் (அபிராமி ஜுவலறி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்வநாயகம் (வீடியோ சென்ரர், முல்லையடி), அஞ்சு (கனடா), கௌரி, சுபா (ஜேர்மனி), ஆனந்தி (ஜேர்மனி), தர்சினி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.12.2001) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வே.நடராசா (ஒலிவர்)
சத்தியா & கோ கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
முல்லையடி,
பண்டத்தரிப்பு. (95671)

# பலஸ்தீன தற்கொலைத் தாக்குதல்கள் ஜெருசலேம் நகரில் தொடர்கின்றன!

இஸ்ரேலியக் கட்டுப்பாட்டு நகரான ஜெருசலேமில் நேற்றுக்காலை பலஸ்தீனத் தீவிரவாதியொருவர் தற்கொலைக் குண்டுத் தாக்குதலை நடத்தினார். இதில் ஏராளமானவர்கள் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

மத்திய ஜெருசலேமின் 'ஹெய்டன்' ஹோட்டலின் முன்பாக இருந்த பஸ்தரிப்பு நிலையம் ஒன்றில் தற்கொலைக் குண்டுதாரி தனது உடலில் கட்டியிருந்த குண்டை வெடிக்க வைத்தார். இதில் பெரும் சேதம் ஏற்பட்டதாக இஸ்ரேலிய வானொலி கூறியது.

பஸ்தரிப்பில் நின்று கொண்டிருந்த மூவர் இத்தாக்குதலில் காயமடைந்ததாக சுயாதீனச் செய்திகள் தெரிவித்தன.

கடந்த வார இறுதியில் இஸ்ரேலிய நகரங்களில் பலஸ்தீனத் தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைத் தாக்குதல்களில் 25 பேர் உயிரிழந்ததையடுத்து, காஸாவில் பலஸ்தீனத தலைவர் அரபாத்தின் அலுவலகத்தின் மீது இஸ்ரேல் வான் தாக்குதல் நடத்தியது.

அதற்குப் பதிலடியாக தற்போது பலஸ்தீனத் தீவிரவாதிகள் ஜெருசலேமில் தற்கொலைத் தாக்குதல் நடத்தியுள்ளதாகக் கருதப்படுகிறது.

இதேவேளை, பலஸ்தீன நிர்வாகம், பலஸ்தீனத் தீவிரவாதிகளுக்கு எதிராக சரியான நடவடிக்கை எடுப்பது உறுதியாகும் வரை தமது தாக்குதல்கள் தொடரும் என்று இஸ்ரேல் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த பலஸ்தீனத் தகவல் தொடர்பு அமைச்சர் யஸீர் அபெட் ரப்போ, மேற்குக்கரை மற்றும் காஸா பகுதிகளை இஸ்ரேல் ஆக்கிரமித்திருப்பதே, பலஸ்தீனத் தீவிரவாதத்துக்குக் காரணம் என்று தெரிவித்தார்.

கடந்தவார இறுதியில் ஜெருசலேமிலும், கைஸானிலும் பலஸ்தீன ஹமாஸ் தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைத் தாக்குதல்களையடுத்து பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத்தின் உத்தரவின் பேரில், தலைவர்கள் உட்பட ஹமாஸ் அமைப்பினர் சுமார் நூறுபேரை பலஸ்தீனப் பொலீஸார் கைதுசெய்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-9-8)



நேற்றுமுன்தினம் காஸாவில் உள்ள பலஸ்தீனப் பாதுகாப்புத் தலைமையகம் மீது இஸ்ரேலிய வான்படை நடத்திய தாக்குதலின் போது புகை மண்டலம் எழுவதைப் படத்தில் காணலாம்.

# ஆப்கானிஸ்தானில் இடைக்கால அரசு டிசெ.22 ஆம் திகதி பதவியேற்கிறது!

## 'பொன்' மாநாட்டில் உடன்பாடு

பொன்,டிசெ.6

ஐநா. ஆதரவுடனான இடைக்கால அரசு ஆப்கானிஸ்தானில் எதிர்வரும் 22 ஆம் திகதி பதவியேற்கும் என்று 'பொன்' மாநாட்டில் கலந்துகொண்டுள்ள ஐநாப்பிரதிநிதி அஹமட் பௌஸி தெரிவித்தார். ஆப்கானில் பெரும்பான்மையான பஸ்தூன் இனத் தலைவர் ஹமிட் கர்ஸாய் இடைக்கால அரசின் தலைவராக பதவியேற்க 'பொன்' மாநாட்டில் இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதற்கான உடன்படிக்கை ஜேர்மன் அதிபர் ஜெர்கண்ட் ஜெரோடர் முன்னிலையில் உள்ளூர் நேரப்படி நேற்றிரவு கையெழுத்திடப்பட்டது.

ஆப்கானிஸ்தானின் எதிர்காலம் குறித்து மேற்கு ஜேர்மனியின் முன்னாள் தலைநகரான பொன்னில் இடம்பெற்ற மாநாட்டின் 9ஆம் நாளான நேற்று இடைக்கால அரசு அமைப்பதற்கான உடன்படிக்கை எட்டப்பட்டுள்ளது.

மாநாட்டில் கலந்துகொண்ட ஆப்கானின் 4 இனக் குழுக்களும் இடைக்கால அரசில் இடம்பெறப்போகும் 30 பேரது பெயர்களையும் அங்கீகரித்துள்ளதாகவும் -

ஆயினும் அவர்களில் 11 பேரிடம் இடைக்கால அரசில் பங்கேற்க ஒப்புதல் பெறவேண்டியுள்ளதாகவும்- ஐ.நா. பேச்சாளர் தெரிவித்தார்.

ஆறு மாத காலம் இடைக்கால அரசு பதவியில் இருக்கும். இந்த அரசில் இரு பெண்களும் பங்கேற்கிறார்கள். ஆப்கானிஸ்தானின் மதத் தலைவர்கள் அடங்கிய சுதந்திரமான பாரம்பரிய சபையான 'லோயா ஜிர்கா' இடைக்கால அரசுக்கு அங்கீகாரம் அளித்தால் மட்டுமே இடைக்கால அரசு செயற்படமுடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆப்கானிஸ்தானில் அமைதிப் படை ஒன்றை நிறுத்துவதற்கும் 'பொன்' மாநாட்டில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இதற்கிடையில் - கந்தகார் அருகே ஒஸாமா பின்லேடன் தங்கியிருப்பதாகக் கூறப்படும் மலைக் குகைகளை நேற்றும் அமெரிக்க விமானங்கள் குண்டு வீசித் தாக்கின. (ஒ-9-8)

# அமெரிக்க வீரர்களைக் கொன்று விமானமொன்றை வீழ்த்தினோம்!

## தலிபான் படையினர் அறிவிப்பு

கந்தகார்,டிசெ.6

கந்தகார் அருகே இடம்பெற்ற மோதலில் அமெரிக்கச் சிறப்புப் படையின் 5 வீரர்களை தாம் கொன்றதாக தலிபான்கள் கூறுகின்றனர்.

கந்தகார் விமான நிலையம் மீது கடுமையான குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்திய அமெரிக்கப் போர் விமானங்களில் ஒன்றை சுட்டு வழ்த்தியதாகவும் அவர்கள் கூறினர்.

ஆயினும் தலிபான்களின் இந்த அறிவிப்புகளை அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சகம் மறுத்துவிட்டது.

இன்னும் ஒருவார காலத்துக்குள் கந்தகார் நகரம் வடக்குக் கூட்டணியிடம் விழுந்துவிடும் என்று எதிர்பார்ப்பதாக 'பென்டகன்' தெரிவித்தது.

இதற்கிடையில், தலிபான்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பகுதிகளைத் தொடர்ந்தும் தக்கவைக்க வடக்குக் கூட்டணிக்கு உதவுவதற்காக, உஸ்பெகிஸ்தானிலிருந்து நூற்றுக்கணக்கான துருப்புகள் 'வக்ராம்' விமான நிலைத்தை வந்தடைந்தன. (ஒ-9)

# 'பிளசண்ட் ஸ்டே' வழக்கிலிருந்தும் விடுவிக்கப்பட்டார் ஜெயலலிதா!

சென்னை,டிசெ.6

கொடைக்கானல் 'பிளசண்ட் ஸ்டே' ஹோட்டல் வழக்கில் இருந்தும் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா சென்னை உயர் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டார்.

நேற்றுமுன்தினம் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி தினகர் இதற்கான தீர்ப்பை வழங்கினார்.

1992இல் ஜெயலலிதா தமிழக முதல்வராகப் பதவி வகித்தபோது சுற்றுலாப் பிரதேசமான கொடைக்கானலில் 'பிளசண்ட் ஸ்டே' என்ற ஆடம்பர ஹோட்டலைக் கட்டுவதற்கு அரசு விதிகளுக்குப் புறம்பாக அனுமதி வழங்கிய குற்றச்சாட்டின் பேரில் கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் சிறப்பு நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது.

இதேபோன்று தமிழக அரசின் சிறுதொழில் நிறுவனமான டான்ஸிக்குச் சொந்தமான 3.06 ஏக்கர் நிலம் மற்றும் அதில் இருந்த கட்டிடங்களையும் ஜெயலலிதாவும் அவரது தோழி சசிகலாவும் பங்குதாரர்களாக உள்ள 'ஜெயா பப்ளிகேஷன்ஸ்' மற்றும் 'சசி என்ரர்பிரைசஸ்' ஆகிய நிறுவனங்களுக்கு மிகவும் குறைந்த விலைக்கு விற்றதன் மூலம் தமிழக அரசுக்கு 3.5 கோடி ரூபா இழப்பை ஏற்படுத்தியதாகவும், ஜெயலலிதா மற்றும் சசிகலா உட்பட சிலர் மீது வழக்குத் தொடரப்பட்டது.

இந்த வழக்குகளில் 'டான்ஸி' நிலப் பேர வழக்கில் ஜெயலலிதா, சசிகலா உட்பட 6 பேருக்குத் தலா 3 ஆண்டுகளும் -

'பிளசண்ட் ஸ்டே' வழக்கில் ஜெயலலிதா மற்றும் சசிகலாவுக்கு தலா 2 ஆண்டுகளும் -

சிறைத்தண்டனைகள் விதித்து கடந்த ஆண்டு ஒக்ரோபரில் தனி நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

தனக்கு விதிக்கப்பட்ட தண்டனையை ரத்துச் செய்து தன்னை நிரபராதி என்று தீர்ப்பளிக்கக் கோரி ஜெயலலிதா சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார்.



சில மாதங்களின் முன்னர் இடம்பெற்ற தமிழக சட்டசபைத் தேர்தலில் - 2 ஆண்டுகளுக்கு மேல் குற்றவியல் வழக்கில் சிறைத்தண்டனை பெற்றவர் தேர்தலில் போட்டியிட முடியாது என்ற விதியின்படி - ஜெயலலிதாவின் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டது.

ஆனால் தற்போது தண்டனை வழங்கப்பட்ட இரு வழக்குகளிலிருந்தும் ஜெயலலிதா நிரபராதி என்று தீர்ப்பளிக்கப்பட்டு விட்டது. இதனால் அவர் தேர்தல்களில் போட்டியிட இருந்த தடை விலகிவிட்டது தெளிவாகியுள்ளது.

ஜெயலலிதாவுக்கு எதிராக மேலும் சில ஊழல் வழக்குகள் தற்போது விசாரணையில் உள்ளபோதும், அவை தற்போது அ.தி.மு.க.வின் ஆட்சியிலுள்ள தமிழக அரசு, அந்த வழக்குகளைத் தீவிரமாக நடத்துமா என்பதும் -

தண்டனை பெற்ற வழக்குகளிலிருந்து அவர் விடுவிக்கப்பட்டதை எதிர்த்து தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யுமா என்பதும் -

சந்தேகத்துக்குரியவை என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

எதிர்க்கட்சியான தி.மு.கவோ அல்லது வேறு தனிநபர்கள் எவராவதோ ஜெயலலிதா விடுவிக்கப்பட்டதை எதிர்த்து பொதுநலன் அடிப்படையில் முறையீடு செய்யலாம்.

ஆயினும் அந்த மேன்முறையீட்டின் மீதான தீர்ப்பு - ஜெயலலிதாவுக்கு சாதகமாகவோ, பாதகமாகவோ - வருவதற்கு முன்னர் அவர் தேர்தலில் போட்டியிட்டு வென்று, தமிழக முதல்வர் ஆகிவிடக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ-9)

## செய்தித் துளிகள்

இந்தோனேஷியத் தீவான சுலேவேசியில் கிறிஸ்தவர்களுக்கு எதிராக வன்முறையில் ஈடுபடும் இஸ்லாமியத் தீவிரவாதிகளில் ஆப்கானிஸ்தானியர் உட்பட வெளிநாட்டினரும் காணப்படுவதாக இந்தோனேஷியப் பொலீஸார் தெரிவித்தனர்.

☆ ☆ ☆

ஜப்பானின் முன்னாள் சர்வாதிகாரி ஹிரோகிட்டோ அவரது ஆட்சிக் காலத்தில் நூற்றுக் கணக்கான பெண்கள் பாலியல் அடிமைகளாக்கப்படக் காரணமாக இருந்ததாக போர்க் குற்றங்களுக்கான ஹேக் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

☆ ☆ ☆

ஆபிரிக்க நாடான கானாவில் மம்பிரசி மற்றும் குசாசி ஆகிய இரு பழங்குடி இனக் குழுக்களிடையே வடகிழக்கு மாகாணமொன்றில் ஏற்பட்ட இனக்கலவரத்தில் 50 பேர் இறந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

☆ ☆ ☆

கென்யாவின் பாரிய குடிசைப் பகுதியான கிபேராவில் வாடகைப் பிரச்சினையையடுத்து மூண்ட வன்முறை மோதல்களில் 10 பேர் உயிரிழந்தனர்.

# தலிபான் படையில் பங்கேற்ற அமெரிக்கப் போராளி கைது!

வாஷிங்ரன்,டிசெ.6

தலிபான் படையில் இணைந்து போராடி வந்த அமெரிக்க இளைஞர் ஒருவரைத் தாம் பிடித்துள்ளதாக ஆப்கானிஸ்தானில் உள்ள அமெரிக்க சிறப்புப் படையினர் அறிவித்துள்ளனர்.

காயமடைந்து ஆப்கான் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்று வந்த சமயத்திலேயே 20 வயதான அந்த இளைஞர் தம்மால் கைது செய்யப்பட்டதாக சிறப்புப்படை அதிகாரி ஒருவர் கூறினார்.

மஷார் ஏ ஷெரீப் நகரின் அருகே உள்ள கோட்டையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தலிபான்கள் கிளர்ச்சி செய்தபோது இடம்பெற்ற மோதலில் தலிபான் படையில் இருந்த இந்த இளைஞரும் காயமடைந்ததாகத் தெரிய வந்துள்ளது.

பாகிஸ்தானில் 16வயதில் கல்வி கற்றுக் கொண்டிருந்தபோது இஸ்லாம் மதத்தைத் தழுவிய இவர், பின்னர் தலிபான்களுடன் சேர்ந்ததாக அப்துல் ஹமீட் என்ற அந்த அமெரிக்க இளைஞர் கூறியுள்ளார். (ஒ-9)

# சவூதி அரேபிய மருத்துவமனை புகைத்தலுடன் புனிதப்போர்

ரியாத்,டிசெ.6

சவூதி அரேபியாவின் ரியாத நகரில் இயங்கும் புற்றுநோய் மருத்துவமனை ஒன்று சர்வதேச புகையிலை நிறுவனங்களுக்கு எதிராக பல லட்சம் டொலர்கள் நஷ்டஈட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளது.

மன்னர் பைசல் மருத்துவமனை, புகையிலைக்கு எதிரான புனிதப் போரை ஆரம்பித்திருப்பதாக அறிவித்துள்ளது.

இந்த மருத்துவமனை சார்பாக சவூதி அரேபியாவின் பிரபல சட்டத்தரணி அஹமட் அல் துவர்ஜிரி புகையிலை தயாரிப்பு நிறுவனங்களுக்கு எதிராக நஷ்டஈட்டு வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.



சவூதி அரேபியாவில் குடமொன்றில் புகையிலையை கொளுத்தி, அதிலிருந்து செல்லும் குழாய்கள் மூலம் பலர் புகை பிடிக்கும் காட்சி.

புகைத்தலினால் பலர் உயிரிழப்பதற்கு காரணமாக மேற்படி நிறுவனங்கள் இருப்பதாகவும் -

புகையிலை தயாரிப்பதன் மூலம் மனித சமுதாயத்தை அழிக்கும் செயலே உலகின் மிக மோசமான பயங்கரவாதம் என்றும் -

நஷ்டஈட்டு மனுவில் துவர்ஜிரி குறிப்பிட்டுள்ளார்.

40 சதவீதமான சவூதி அரேபிய ஆண்கள் புகைப்பிடிக்கும் பழக்கமுடையவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## A/L பொருளியல்

க.பொ.த. உயர்தரப் பரீட்சை 2000, 2001 வினாவிடை, வெளிவாரி விளைவுகள், பேரினப் பொருளாதாரம், சர்வதேச வர்த்தகம், பணம், நாணய மாற்று விதம் ஆகிய நூல்கள் விற்பனையாகின்றன. ஆசிரியர்: வே.கருணாகரன். (95621)

## தவறிவிட்டது

திருமதி ப.விக்னேஸ்வரி என்பவருடைய கைக்கடிகாரம் (CITIZEN) கொக்குவில் இந்துக் கல்லூரி வீதிக்கும் மருத்துவ பீடத்திற்குமிடையில் 04.12.2001 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் திருமதி ப.விக்னேஸ்வரி (விரிவுரையாளர்) இந்து நாகரிகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (95649)

கேணியடி, ஆடியபாதம் வீதியைச் சேர்ந்த திருமதி சுந்தரேஸ்வரி ஜெயகுமாரனின் தேசிய அடையாள அட்டை (இல. 496712919v), விசேட அடையாளஅட்டை என்பன யாழ்பஸ் நிலையப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 124, ஆடியபாதம் வீதியில் ஒப்படைத்துதவவும். (95656)

ஜெகதீசன் முத்துக்குமாரசாமி என்பவருடைய வங்கி அடையாள அட்டை (இல.23414) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 51, சந்தனமாதா வீதி, சுண்டிக்குளி எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (95658)

## புறோயிலர் விற்பனைக்கு

மலிவு விலையில் புறோயிலர் விற்பனைக்கு உண்டு. மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**அண்ணா பாம்**
*ஸ்ரேசன் றோட்,*
*இணுவில்.* (C/19631)

## கும்பாபிஷேகம்

காரைநகர் ,டிசெ.6

ஈழத்துச் சிதம்பரம் என அழைக்கப்படும் காரைநகர் சிவன் கோவில் இராஜகோபுரம் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10.30 தொடக்கம் 12.00 மணிவரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிறுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கந்தமாரம்பம் விநாயக வழிபாடு என்பவற்றுடன் ஆரம்பமாகி மறுநாள் திங்கட்கிழமை முற்பகல் 10.30 தொடக்கம் 12.00 மணிவரையுள்ள சுபவேளையில் சிவன் மற்றும் ஐயனாருக்கு அருகருகே அமைந்துள்ள பஞ்சநிலை, திரிநிலை மாடக் கோபுரங்களுக்கே மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

பிற்பகல் 5.00 மணிக்கு சுவாமி திருவீதி உலா வரும் காட்சியும் இடம்பெறும். அன்றைய தினம் மாணிக்க வாசகர் மடாலயத்தில் அன்னதான நிகழ்வு நடைபெறவுள்ளது. (ம-73)

## பரீட்சை அறிவுறுத்தல் கூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.6

எதிர்வரும் 11 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான அறிவுறுத்தல் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

கோப்பாய் உட்பட வலிகாமம் வலயத்தில் உள்ள பரீட்சை நிலையங்களில் கடமையாற்றவிருக்கும் இணைப்பு நிலைய உத்தியோகத்தர், உதவி இணைப்பு நிலையஉத்தியோகத்தர், பரீட்சை நிலைய மேற்பார்வையாளர், நிரந்தர நோக்குநர் ஆகியோருக்கான நியமன அழைப்புக் கடிதங்கள் சம்பந்தப்பட்டவர்களின் பாடசாலைகளுக்கும், அலுவலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மேற்படி அறிவுறுத்தல் கூட்டத்தில் சம்பந்தப்பட்டவர்கள் தவறாது சமுகம் கொடுக்குமாறு வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் வீ. இராசையா தெரிவித்தார். (க-8)

---

உ
சிவமயம்

தமிழ்க் கலாசார மறுமலர்ச்சியின் தந்தையும்
ஐந்தாம் சமயகுரவருமான
நல்லை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின்

## குருபூசைத் தினவிழா

காலம்:- இன்று (06.12.2001) மகநட்சத்திரம் கூடிய வியாழக்கிழமை 7.00 மணி முதல்

இடம்:- ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலயம், யாழ்.பல்கலைக்கழகம்.

நிகழ்ச்சி நிரல்

☆ ருத்திராபிஷேகமும் விசேட பூசைகளும்
☆ பண்ணிசை

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்து மன்றம், யாழ்.பல்கலைக்கழகம்,
ஸ்ரீ பரமேஸ்வராக் கல்லூரி இயக்குநர் சபை,
ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலய பரிபாலன சபை.

*திருநெல்வேலி.*
(95634)

---

## நன்றியுணர்வோடு பாராட்டி வாழ்த்துகின்றோம்

**புனித பரலோக மாதா ஆலயம் - நீர்வேலி**

மேற்படி ஆலய புனரமைப்புப் பணிகளுக்காக ரூபா இரண்டு லட்சத்தை ஒதுக்கீடு செய்து அதிலிருந்து ஒரு லட்ச ரூபாவை எமக்கு வழங்கி உதவியமைக்காக,



மாண்புமிகு அமைச்சர்
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும்



கோப்பாய் பிரதேச சபைத் தலைவர்
**உயர்திரு.பூ.குணசிங்கம்** J.P.U.M.
அவர்களையும்



எமது
கோப்பாய் பிரதேச சபையின் உப தலைவர்
**திரு.U.L.A.ரவி**
அவர்களையும்

நன்றியுணர்வுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

- பங்குத் தந்தையும்
பங்கு மக்களும்
புனித பரலோக மாதா ஆலயம்.

*நீர்வேலி.*
(95637)

---

உ
ஓம் ஸ்ரீ சாயிராம்

## 4ஆம் ஆண்டு உள்ளம் நெகிழ்ந்த நினைவஞ்சலி

வையகத்துள் 14 - 12 - 1917



தெய்வீகத்துள் 20 - 11 - 1997

அமரர்

## சின்னத்தம்பி சரவணமுத்து

*(ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியரும், சமய, சமூகசேவையாளரும்)*

அறத்துடன் சேர்ந்த அன்பு அமைந்திட வாழ்ந்து சேர்ந்த
பிறப்பிடப் புகழ் பெருக போதித்த கல்வி ஞானம்
மறுத்திடாது வந்தோர் வேண்டும் வகையெல்லாம் அளித்து வந்து
சிறப்புறும் உமது வாழ்க்கை சொல்லினால் ஆகுமாமோ?

நற்றமிழ் வளர்த்து வந்த நாவலர் பெருமான் போன்று
கற்றறிந்த கலைகள் எல்லாம் கருத்துடன் உபதேசித்து
பொற் சபை மன்றுள் ஆடும் பொன்னம்பலவாணர் நேசம்
பெற்றநீர் எம்மை இங்கு பெற்றதும் நம் தவப் பயனே!

குன்றின்மேல் விளக்கே போன்று நம் குலத்தினை
விளங்கவைத்து
சென்றிட்ட சபைகள் எல்லாம் சிறப்புச் சொற்பொழிவு தந்தீர்
இன்று நீர் எம்மைவிட்டு எங்குமே செல்லாநின்று
மன்றினுள் நாயன்மாரில் அறுபத்து நால்வர் ஆனீர்!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*"குமாரபுரி"*
*கைதடி வடக்கு.*

- சாயி சரவணமுத்து குடும்பத்தினர்.
(95644)

---

# பல்லாண்டு வாழ்க..!

HAPPY



BIRTHDAY

## செல்வன் த.சானுசன்

இணுவிலைச் சேர்ந்த
குமாரலிங்கம் தவத்தழகன் - தமிழ்ச்செல்வி தம்பதிகளின்
திருமைந்தன் **செல்வன் த.சானுசன்**

தனது முதலாவது பிறந்ததினத்தை பரராசசேகரப்பிள்ளையார் திருவருளால் லண்டன் நகரில் இன்று (06.12.2001) வியாழக்கிழமை கொண்டாடுகிறார். இவரை அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, சித்தப்பா, சித்திமார், மாமாமார், மாமிமார், பூட்டி, லண்டன் - சுவிஸ் - ஜேர்மனியில் வாழும் உறவினர்கள், இணுவில் - கோண்டாவிலில் வாழும் பிரியமுள்ள உறவினர்கள் அனைவரும் பல்லாண்டு பல்லாண்டு வாழ வாழ்த்துகிறார்கள்.

*இணுவில்.*

*தகவல்:*
(95633) **வீரசிங்கம் குமாரலிங்கம்.**

---

## புனித நீக்கிலார் ஆலயம் - மிருசுவில்
## வருடாந்தப் பெருவிழா - 2001

மிருசுவில் ஆலயத்தில் நாளை முதல்
நடைபெறும் வழிபாடுகளின் விவரம்:-

★ 07-12-2001 மாலை 4 மணி - கொடியேற்றம், *(வெள்ளி)* வழிபாடும், திருப்பலியும்.
★ 08-12-2001 மாலை 4 மணி - . வழிபாடுகளும், *(சனி)* திருப்பலியும்.
★ 09-12-2001 காலை 9 மணி - திருவிழா திருப்பலி. *(ஞாயிறு)*

பங்கு மக்களை அன்புடன் அழைக்கின்றேன்.

- அருட்தந்தை ஜே.எ.செல்வராஜா
அடிகளார் தலைமையில்,

(95645)

---

# கண்ணீர் அஞ்சலி



*அமரர்*
பாணிக்குரல் மேஜர் ஷண்
## S.சிவசண்முகலிங்கம்

*(ஷண் றெக்கோடிங் ஸ்ரிபாட் - உரிமையாளர்)*

சிம்மநாதம் ஓய்ந்ததுவோ?
சிந்துகின்றோம் கண்ணீர் மழை!
உன் பிரிவு தாங்க முடியவில்லையே
எங்குற்றாய் எமைவிட்டு?
*ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.*

- இ.மனோகரன்
மனோ லைட் - கோப்பாய்.

(C/19653)

---

# துயர்பகிர்வு

*இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்*
*யாழ்ப்பாணம்*

எமது கூட்டுத்தாபனத்தில் நீண்டகாலம் பணியாற்றிய
இயந்திரப் பொறியியலாளர்

## செல்லையா செல்லச்சாமி

*(Mechanical Engineer)*

அவர்களின் மறைவினையிட்டு துயருறும் அவரது குடும்பத்தினருடன் நாமும் துயரினைப் பகிர்ந்துகொள்வதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

பொறுப்பதிகாரியும், உத்தியோகத்தர்களும்,
இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபன
யாழ்ப்பாண காரியாலயமும்,
உரும்பிராய். செங்கிறீற் பகுதியும்.

*65, கன்னாதிட்டி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(C/19651)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



நடிப்பிசைச் செல்வன், கலைவேந்தன், நவரச வள்ளல் என்னும் பட்டங்களைப் பெற்று அண்மையில் வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சின் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் "கலைஞான கேசரி" என்னும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட

**திரு.பொனிபஸ் தைரியநாதன்**

*அவர்களை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

சுன்னாகம் நகர மத்தி
ஐக்கிய அபிவிருத்தி சனசமூக நிலையம்,
சுன்னாகம்.

(C/19657)

## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

கந்தரோடை ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் ஆலய புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு செய்து அதில் ஒரு லட்சம் ரூபாவை வழங்கியுதவிய பெருந்தகைகளான,



மாண்புமிகு அமைச்சரும், ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி செயலாளர் நாயகமுமாகிய

**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களையும்



வலி.தெற்கு பிரதேச சபைத் தலைவர்

**திரு.கமலசேகரன் (பாபு)**

அவர்களையும் நன்றியுடன் *பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

*கணக்கர் வளவு, கந்தரோடை, சுன்னாகம்.* ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார், ஆலய பரிபாலன சபையினர்.

(95660)

## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

பிரப்பம்பதி தான்தோன்றி ஸ்ரீ ஞானவைரவர் ஆலய கட்டட நிதிக்கு உதவி வழங்கியமைக்காக,



மாண்புமிகு அமைச்சர் **கே.என்.டக்ளஸ் தேவானந்தா** அவர்களையும்



யாழ்.மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் **திரு.கே.வி.குகேந்திரன் (ஜெகன்)** அவர்களையும்



ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவரும் தீவுப்பகுதி அமைப்பாளருமான **திரு.என்.மதனராஜா (மனோ)** அவர்களையும்



நல்லூர் பிரதேச சபைத் தலைவரும் யாழ்.மாவட்ட அமைப்பாளருமான உயர்திரு. **க.மணிபல்லவராஜன் (நிஷாந்தன்)** J.P.U.M. அவர்களையும்

*நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

ஆலய பரிபாலன சபை
வண்வடமேற்கு, யாழ்ப்பாணம்.

(95657)

## மரண அறிவித்தல்

### சின்னப்பா பொன்னுத்துரை

*(பல நோ.கூ.சங்க கிளைக்குழு முன்னாள் தலைவரும், விவசாயக்குழுத் தலைவரும், சிவத்தொண்டரும்)*

மட்டுவில் தெற்கு சிவன்கோயிலடியைப் பிறப்பிடமாகவும் உடுவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட சின்னப்பா பொன்னுத்துரை 3.12.2001 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்தங்கத்தின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற சாந்தநாயகி மற்றும் சிவக்கொழுந்து வேதநாயகம், குலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சின்னத்துரை, சின்னத்தம்பி, காலஞ்சென்ற இராமநாதன், செல்லம்மா ஆகியோரின் மைத்துனரும், அமிர்தாம்பிகை, அன்னலட்சுமி, விக்கினேஸ்வரன், இராஜேஸ்வரி, லலிதாம்பிகை, தனலட்சுமி, கருணாகரன், ஜெயச்சந்திரன், பவானி, கிருபாகரன் ஆகியோரின் மாமனாரும ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்றுமுன்தினம் (4.12.2001) செவ்வாய்க்கிழமை நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:-*
ஜெயச்சந்திரன் (செந்தி - *மருமகன்*)
*உடுவில் கிழக்கு, சுன்னாகம்.* (95659)

## கந்தரோடை பொதுமயானம் புனரமைப்பு

வலிகாமம் தெற்கு,டிசெ.6

கந்தரோடை 'சங்கம்புலவு' பொது மயானம் மூன்று லட்சம் ரூபா செலவில் வலிகாமம் தெற்கு பிரதேச சபையினால் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

நீண்டகாலமாகப் புனரமைப்புச் செய்யப்படாமல் மயானம் முழுவதும் பற்றைகளும், கடுகு, நாவல் மரங்களும் நிறைந்து காணப்பட்டன.

தகுந்த பராமரிப்பு இன்மையால் மயானத்துக்கு வருவோர் தங்கி இருக்கக் கூடிய மடத்தின் ஓடுகள் பலவும் திருட்டுப் போயுள்ளன.

பிரதேச சபைத்தலைவர் க.கமலசேகரன் மயானப் புனரமைப்பு பணிகளை அண்மையில் உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

(க-152)

## நல்லூரில் நாளை நாவலர் குருபூசை நிகழ்வு

யாழ்ப்பாணம்,டிசெ.6

ஆறுமுக நாவலரின் குருபூசை நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் திருமதி கலைவாணி இராமநாதன் விசேட சொற்பொழிவையும் -

செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் சிறப்புச் சொற்பொழிவையும் நிகழ்த்தவுள்ளனர்.

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் இன்று வியாழக்கிழமை காலை 9.00 மணி அளவில் நல்லூர் கச்சேரி - நல்லூர் வீதி ஸ்ரீ காமாட்சி அம்பாள் மடாலயத்திலும், நாவலர் வீதி, நாவலர் கலாசார மண்டபத்தில் பிற்பகல் 3.30 மணியளவிலும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை விழாவைக் கொண்டாட உள்ளனர்.

(க-9)

## குடும்பத் தலைவர்களை இழந்த குடும்பங்களுக்கு கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,டிசெ.6

வடபகுதியில் கைது செய்யப்பட்டு காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம், குடும்பத் தலைவர்களை இழந்த ஆறுகுடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு விசேட கொடுப்பனவை வழங்கவுள்ளது.

ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வந்த கொடுப்பனவை, இதுவரை பெற்றுக்கொள்ளாத குடும்பங்களுககே இக்கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. இச்சங்கம் குடும்பத் தலைவர்கள்ள இழந்த 34 குடும்பங்களுக்கு சுமார் ஒரு லட்சத்து 70 ஆயிரம் ரூபாவை இதுவரை வழங்கியுள்ளது.

தெரிவுசெய்யப்பட்ட ஆறு குடும்பங்களின் முக்கிய உறுப்பினர்கள் வருமாறு:-

பா.உலகேஸ்வரி, க.ஞானேஸ்வரி, க.ஜானகி, வி.பிரேமலதா, பி.மகேஸ்வரி, பாரதி.

இக்குடும்பங்களைச் சேர்ந்தோர் எதிர்வரும் 8ஆம் திகதிக்கு முன்பாக - "தேடுகிறோம் கண்டுபிடிக்க முடியவில்லை, மனவருத்தம் அடைகின்றோம்'' என்று ஜனாதிபதி அனுப்பிய துண்டுடனும், காணாமற்போனமையை உறுதிசெய்யும் கிராம அலுவலரின் அத்தாட்சி மற்றும் அண்மையில் எடுக்கப்பட்ட புகைப்படம் என்பவற்றுடனும் சங்கச் செயலாளரைச் சந்திக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

புகைப்படம் எடுத்தமைக்கான பற்றுச் சீட்டை சமர்ப்பித்தால் அதற்கான செலவும் சங்கத்தால் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(க-9)


## விற்பனைக்கு வந்துவிட்டன!

*தந்தை S.J. பெர்க்மான்ஸ்சின் ஜெபதோட்ட ஜெயகீதம் பாடல் கசற் Vol.1-19 உட்பட (ஒறிஜினல்) பாடல்புத்தகங்கள் (Vol.-19) ஸ்டிக்கர் வகைகள், கிறிஸ்மஸ் வாழ்த்து மடல்கள், கிறிஸ்மஸ் பாடல் கசற் மற்றும் கிறிஸ்தவ நூல்கள், பழைய புதிய வேதாகமங்கள், கீடேக் வகைகள் என்பன விற்பனைக்கு உண்டு.*

*கிடைக்குமிடம்:*

**C.L.S புத்தகசாலை,**
*வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.*

(95642)


மனப்பூர்வமாக நன்றியுடன்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

வரணி வர்த்தக சங்கம்

*அரசியல் உரிமையும் அபிவிருத்தியும் தொடர வேண்டும்.....*

வரணி வர்த்தக சங்க அங்கத்தவர்களுக்கு (சிறு வர்த்தகர்கள் கடந்த 1995 தொடக்கம் 2001ஆம் ஆண்டு வரை பாதிக்கப்பட்ட அங்கத்தவர்களுக்கு) 51/2 இலட்சம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்து உடன் வழங்கி எமது அங்கத்தவர்களின் வாழ்க்கையை வளம்படுத்த உதவியவர்களான,



வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மாண்புமிகு அமைச்சர்

**K.N.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களையும்



சாவகச்சேரி E.P.D.P. அமைப்பாளர் உயர்திரு.

**அலெக்சாண்டர்** (சாள்ஸ்)

அவர்களையும்

*மனப்பூர்வமாக நன்றியுடன் நாம் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

வரணி வர்த்தக சங்க அங்கத்தவர்கள்.

(C/19652)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

வேளாதோப்பு ஸ்ரீ மதுரை மகா முத்துமாரி அம்மன் ஆலயம், கல்வியங்காடு.

மேற்படி ஆலயப் புனரமைப்புக்கு நிதி ஒதுக்கி அதில் அரைவாசி நிதியை வழங்கி உதவிய,



வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் **கே.என்.டக்ளஸ் தேவானந்தா** அவர்களையும்



ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளராகிய மதிப்புக்குரிய **கே.வி.குகேந்திரன்** (ஜெகன்) அவர்களையும்

பாராட்டி மகிழ்கின்றோம்.

ஆலய பரிபாலன சபையினர்.

(c/19655)

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்க உறுப்பினரும், விவசாய பொறியியற்றுறை தலைவருமான

**எந்திரி இ.விஜயரத்தினம்** அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி இராமசாமி பவளம்**

அவர்கள் லண்டனில் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

விவசாயபீட ஊழியர் நலன்புரிச் சங்கம்,
*யாழ்.பல்கலைக்கழகம்.*

(95648)


வாடிக்கையாளர்களுக்கு ஒரு நற்செய்தி!

நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை! இன்றே நாடுங்கள்!!

## லைடன் புடைவை நிலையம்

06.12.2001 முதல் 31.12.2001 வரையும்.

சகலவிதமான புடைவைகளுக்கும் விசேட கழிவு வழங்கப்படும் என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

T.P. 2381

**லைடன் புடைவை நிலையம்**, 410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(C/19654)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

தெல்லிப்பழை - அளவெட்டி - கணேஸ்வரம்
குருக்கள் கிணற்றடி விநாயகர் ஆலயம்

மேற்படி ஆலய புனரமைப்புப் பணிகளுக்காக ரூபா 3லட்சம் ஒதுக்கீடு செய்து, அதில் 1 1/2 லட்சம் ரூபாவை உடனடியாகத் தந்துதவியமைக்காக,



வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கு தமிழ்மொழி விவகாரங்கள் அமுலாக்கல், இந்துகலாசார அமைச்சருமான மாண்புமிகு

**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களையும் -

யாழ்.மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளருமான



உயர்திரு. **கே.வி.குகேந்திரன்** (ஜெகன்)

அவர்களையும் -

முன்னாள் யாழ். நாடாளுமன்ற உறுப்பினர்

உயர்திரு. **ச.சிவதாசன்** அவர்களையும் -



வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினரும் காங்கேசன்துறைத் தொகுதி ஈ.பி.டி.பி. அமைப்பாளருமான

உயர்திரு. **சிவகுமார்** (வேலு) அவர்களையும் -

நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

- நிர்வாக சபையினர்.

(95667)


**D.C.M**

பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

B.A; B.COM PART I

வினா~விடை வகுப்புகள்

பொருளியல்:~S.வரதராஜன்

கணக்கீடு:~ B.முகுந்தன் (கிரயக் கணக்கீடு)

வியாபாரக் கணிதம்:~ N.அம்பி

ஆரம்பம்:-08 - 12 - 2001 சனி 6.15 A.M

A\L 2002 DAY CLASS

பொருளியல் S.வரதராஜன்

ஆரம்பம்:-07 - 12 - 2001 வெள்ளி 8.00 A.M


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 30 - 06 - 1983

உதிர்வு 28 - 11 - 1999

**செல்வன் குணரத்தினம் தயாபரன் (ஜெகன்)**

(மீசாலை வீரசிங்கம் ம.வி.மாணவன்)

*திதி: ஷஷ்டி 06.12.2001*

அன்பின் திருவுருவே! ஆருயிர்ச் செல்வமே!
எங்களை விட்டுப் பிரிந்து ஈராண்டு சென்றது ஐயா!
உனது துயர் தாங்காது துடிக்கின்றோம் நாம்!
இரண்டு ஆண்டுகள் என்ன ஈராயிரம் ஆண்டுகள் சென்றாலும்
ஜெகனே உன் நினைவு எங்கள்
நெஞ்சங்களை விட்டு என்றுமே அகலாது!

அன்னாரின் நினைவையொட்டி இன்று (06.12.2001) வியாழக்கிழமை தொண்டமனாறு செல்வச் சந்நிதியில் நடைபெறும் மோட்ச அர்ச்சனையிலும், மணியம் மடத்தில் நடைபெறுகின்ற அன்ன தானத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*உன் பிரிவால் வாடும்:*
*பெற்றோர், சகோதரர், மைத்துனன் மற்றும் குடும்பத்தினர்.*

*நிரந்த முகவரி:*
*மீசாலை வடக்கு,*
*கொடிகாமம்.*

*(C/19660)*

*தற்காலிக முகவரி:*
வடலியடைப்பு அரசடி,
பண்டத்தரிப்பு.

## கணிதபாட வழிகாட்டல் வகுப்புகள்

வலிகாமம் தெற்கு,டிசெ.6

இவ்வருடம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் நலன் கருதி அளவெட்டி முற்போக்கு வாலிபர் சனசமூகநிலையத்தின் அனுசரணையுடன் கணிதபாடத்துக்கான வழிகாட்டல் வகுப்புகள் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தில் நடைபெறும்.

ஆசிரியர் மகேந்திரனால் நடத்தப்படவுள்ள இவ் வழிகாட்டல் வகுப்புகளில் கலந்துகொள்ளும் மாணவர்களுக்கு மாதிரி வினாத்தாள்களும் வழங்கப்படும்.

(ஐ-152)

## அறிவுறுத்தல் கூட்டம்

வலிகாமம் தெற்கு,டிசெ.6

எதிர்வரும் 11 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையின் வலிகாமம் கல்விவலய இணைப்பு நிலைய உத்தியோகத்தர், உதவி இணைப்பு நிலைய உத்தியோகத்தர்கள், பரீட்சை நிலைய மேற்பார்வையாளர்கள், நிரந்தர நோக்குநர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

(ஐ-152)

## பிரிட்டிஷ் தூதுவரிடம் சிஹல உறுமய ஆட்சேபம்

கொழும்பு,டிசெ.6

விடுதலைப் புலிகள் சார்பில் லண்டனில் டிசெம்பர் முதலாம் திகதி நடத்தப்பட்ட கூட்டம் குறித்து சிஹல உறுமய பிரிட்டிஷ் தூதுவரிடம் ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

'சிஹல உறுமய' கட்சியின் சார்பில் வண.ஹெடிகல்லே விமலசார இந்த ஆட்சேபத்தை தெரிவித்துள்ளார்.

புலிகள் இயக்கம் கூட்டம் நடத்த அனுமதித்ததன் மூலம் பயங்கரவாதம் தொடர்பாக தனது இரட்டை வேடத்தை பிரிட்டிஷ் அரசாங்கம் அம்பலப்படுத்தியுள்ளது என்று அவர் ஆட்சேபத்தில் தெரிவித்துள்ளார்.

(ஐ)

## காலியில் குண்டுவெடிப்பு

காலிப் பகுதியில் பிட்டிகல என்னும் இடத்தில் உள்ள ஒரு வாக்களிப்பு நிலையத்துக்கு வெளியே குண்டு ஒன்று வெடித்தது. 17 பேர் காயமடைந்தனர்.

கடுமையாகக் காயமடைந்த ஐவர் கராப்பிட்டிய வைத்தியசாலையில சேர்க்கப்பட்டனர்.

வாக்களிப்பு நிலையத்துக்கு வெளியே நின்ற ஐ.தே.க.ஆதரவாளர்களை இலக்குவைத்தே குண்டு எறியப்பட்டிருக்கின்றது என்று பொலீஸார் கூறுகின்றனர். (ஐ)

## வீடு எரிப்பு

வவுனியா,டிசெ.6

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், முஸ்லிம் காங்கிரஸின் மூத்த துணைத் தலைவருமான யூ.எம்.எச். ஹனிபாவின் (மருதூர்க்கனி) மருதமுனை அன் - மனார் வீதியிலுள்ள வீடு தீ வைத்துக் கொளுத்தப்பட்டது.

புனித திருகுர்ஆன், ஹதீஸ் பிரதிநிதிகள் உட்பட தாம் கடந்த ஐம்பது வருடங்களாகச் சேர்த்து வைத்திருந்த பெருமளவு நூல்கள் எரிந்து நாசமாகின என்று அவர் தெரிவித்தார்.

முஸ்லிம் காங்கிரஸ்காரர்களே இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்டிருந்தனர் என்றும் அவர் குற்றம் சாட்டினார். (ஐ)

## சான்றிதழ்களைப் பெற அறிவுறுத்து

காரைநகர்,டிசெ.6

கடந்த ஆண்டு ஆசிரிய கலாசாலை இறுதிப் பரீட்சைக்குத் தோற்றி அதில் சித்தியடைந்த கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஆசிரிய மாணவர்கள் அனைவரும் எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு நேரடியாக வந்து பெறுபேற்றுச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கலாசாலை அதிபர் மு.பரஞ்சோதி அறிவித்துள்ளார்.

(ம-73)


கல்வி ஆண்டு - 2002 இல்

தரம் 03 முதல் 11 வரை

புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன

எல்லா வகுப்புகளிலும் ஒருசில அனுமதிகள் மட்டுமே வழங்கப்பட உள்ளதால் டிசம்பர் 10ம் திகதியுடன் அனுமதிகள் வழங்குவது நிறுத்தப்படும்.

The Express Institute (95004)

Irupalai, Kopay.

அதிபர்


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



*அன்னை மடியில்* 14 - 05 - 1926

*இறைவன் கழலில்* 08 - 12 - 1998

**திருமதி சின்னத்தம்பி கனகம்மா**

*திதி: அபரபக்க ஷஷ்டி 06.12.2001*

அன்பை ஊட்டி அறிவை வளர்த்து
அவனி போற்ற எமை வாழவைத்த
எங்கள் அன்பு அன்னையே!
எங்களை அன்னைபோல்
பாராட்டிச் சீராட்டி வளர்த்த அப்பம்மாவே!
ஆண்டுகள் மூன்றானாலும் ஆறாது எமது துயரம்
நீங்கள் அரன் அடியில் வாழ என்றும் பிரார்த்திக்கும்

மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

*நிரந்தர முகவரி:*
சி.முருகமூர்த்தி (மூர்த்தி)
முருகன் இரும்புத் தொழிற்சாலை
அன்ட் மணப்பந்தல், மீசாலை.

*தற்காலிக முகவரி:*
காளி கோயிலடி,
கரவெட்டி.

*(C/19661)*

## கண்ணீர் அஞ்சலி

*எமது கழக உறுப்பினரும் "ஷண் றெக்கோடிங் ஸ்பொட்" உரிமையாளருமாகிய*

**எஸ். சிவஷண்முகலிங்கம்**

*அவர்களின் மறைவைக் கேள்வியுற்று துயரடைகின்றோம். அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.*

*இல.165, மானிப்பாய் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

*(C/19662)*

யாழ்ப்பாணம்
வணிகர் கழகம்.

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி சிவபுண்ணியம்

அச்சுவேலி, நாவற்காட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னத்தம்பி சிவபுண்ணியம் நேற்று (05.12.2001) புதன்கிழமை காலமானார்.

அன்னார் இராசமுத்துவின் அன்புக் கணவரும் சிவலிங்கம் (ஆசிரியர், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), சிவபாதலிங்கம், புஸ்பராணி, செல்வராணி, இந்திராணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், நவரத்தினம், தங்கவேல், திருஞானமூர்த்தி (பிரான்ஸ்), இராஜினிதேவி (கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), நேசகாந்தினி ஆகியோரின் அருமை மாமனாரும், முகிந்தா (யாழ்.பல்கலைக்கழகம்), மசேலன், பிரவீணா, சோவியா, சரண்ராஜ் ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.12.2001) வியாழக்கிழமை முற்பகல் 10மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அச்சுவேலி தெற்கு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சி.சிவலிங்கம
(மகன்)

*அச்சுவேலி தெற்கு,*
*அச்சுவேலி.*

(95663)

### திருமதி முருகேசு தங்கம்மா

அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் இராஜசிங்கம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முருகேசு தங்கம்மா அவர்கள் நேற்று (5.12.2001) புதன்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை முருகேசுவின் அன்பு மனைவியும், செல்வநாயகம் (ரிங்கர்), நாகராஜா (பட்டயக் கணக்காளர், கொழும்பு), வசந்தகோகிலம், லீலாவதி, ஆனந்தராஜா, விஜயராணி, ஜெயராஜா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கனகாம்பிகை, செல்வமாணிக்கம், அலன்கிளரன்ஸ், ஆன்வசந்தா, ஜெயதேவி பத்மநாதன், (தெ.ப.உ.வி.சங்கம், அரியாலை), பத்மாவதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற தங்கம்மா, அன்னபூரணம், பவளம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை, சின்னத்துரை ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும் ஆவார்.

அவரது இறுதிக்கிரியைகள் இன்று (6.12.2001) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணியளவில் கோம்பையன்மணல் மயாணத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செல்வநாயகம், ஆனந்தராஜா
(பிள்ளைகள்)

*இல.111/13, இராஜசிங்கம் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

*(95665)*

## உதயன்

### உண்மை கூறும் அரிச்சந்திரன்

1997ஆம் ஆண்டு முதல் சுமார் இரண்டு ஆண்டு காலம் வன்னியில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளின் போது 3 ஆயிரத்து 800இற்கும் மேற்பட்ட படையினர் உயிரிழந்தனர்.

முன்னாள் இராணுவப் பேச்சாளரும் பிரதி சபாநாயகரும் தற்போதைய ஐ.தே.கட்சிப் பிரமுகருமான மேஜர் ஜெனரல் சரத் முனசிங்க இப்படி புதுத் தகவல் வெளியிட்டிருக்கின்றார்.

இந்த இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட சமயத்தில் இராணுவப் பேச்சாளராக இருந்த சரத் முனசிங்க, அப்போது முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்கும் விதமாகத் தாம் தகவல் வெளியிட்டதை இப்போதாவது ஒப்புக்கொண்டிருக்கின்றார்.

நன்கு திட்டமிடப்படாத இந்த இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு இரண்டரை வருடங்களின் பின்னர் எந்தவிதப் பயனுமின்றி இராணுவத்தினர் பழைய நிலைக்குத் திரும்பியதோடு கைவிடப்பட்டதாகத் தெரிவித்து, இது விடயத்தில் இராணுவத்தையும் அரச உயர்பீடத்தையும் ஒரு பிடி பிடித்து, கருத்து வெளியிட்டிருக்கின்றார் அவர்.

இராணுவப் பேச்சாளராக இருந்த காலத்தில் அவர் வெளியிட்ட தகவல்கள், கருத்துகள், 'அவித்த இறால் துடிக்கிறது' என்ற பாணியில் அவர் கூறிய 'உண்மைகள்' மக்கள் மத்தியில் பிரபலமானவை. அவை உண்மை கூறுவதில் 'நவீன அரிச்சந்திரன்' (?) என்ற பெயரையே மக்கள் மத்தியில் அவருக்குப் பெற்றுக் கொடுத்திருந்தன.

எண்ணூறுக்கும் அதிகமான விடுதலைப் புலிகளைக் கொன்றவர் தான் என்று தனக்குத் தானே அவர் பதக்கம் சூட்டியபோதுகூட பொதுமக்கள் அவரது வழமையான 'உண்மை'யாகவே அத்தகவல் இருக்கும் என்பதை ஊகித்துக் கொண்டனர்.

ஆனால் வழமையாக 'உண்மை'யைத் தவிர, வேறு எதுவும் கூறத் தெரியாத அவரது பண்பு காரணமாக இப்போது அவர் கூற முற்படும் உண்மையைக் கூட மக்கள் சந்தேகக் கண்கொண்டுதான் பார்க்கின்றார்கள்.

'ஜெயசிகுறு' குறித்து இராணுவத்திலிருக்கும்போது அவர் உண்மை கூறாததையும், திரிபுபடுத்திப் பொய்த் தகவல்களை வெளியிட்டதையும் ஓரளவுக்கு ஏற்றுக்கொள்ளலாம் - அது அவர் பதவிவழிக் கடமையாக - பொறுப்பாக - இருந்திருக்கலாம் என்று கருதி.

ஆனால் -

இராணுவத்தை விட்டு வெளியேறிய கையோடோ -

அல்லது கட்சிக் கட்டுப்பாடுகளுக்கு அப்பால் துணை சபாநாயகர் என்ற பதவி அந்தஸ்தோடு சுதந்திர மனிதராக இருந்தபோதோ -

இந்த உண்மைகளை அவர் கூறவில்லை. இப்போது கட்சித் தாவல்கள், 'பல்டி'களின் பின்னர் இந்த 'உண்மையை' அவர் கூற முற்படுவதால் அதுவும் வழமைபோல் அவரது உண்மைகளின் வரிசையில் ஒன்றாக இருக்குமோ என்ற சந்தேகத்தை மக்களுக்கு ஏற்படுத்தத் தவறவில்லை.

யாழ்.குடாநாட்டின் இராணுவத் தளபதியாக அவர் இருந்தபோது குடாநாட்டில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தில் ஓர் அங்குல நிலத்தைக்கூடப் புலிகளால் பிடிக்கமுடியாது; பிடிக்க அனுமதிக்கமாட்டேன் என்று அவர் சூளுரைத்ததும் -

அந்தப் பிரகடனம் சஞ்சீவிப் பத்திரிகையில் வெளியான அன்று இரவே ஆனையிறவுக்கு அருகே கட்டைக்காடு மற்றும் சூழவுள்ள பிரதேசங்களில் இருந்த இராணுவ முகாம்களை விடுதலைப் புலிகள் அதிரடி மூலம் தாக்கிக் கைப்பற்றியதும் -

வடபுலத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்துக்கு அன்று தொடங்கிய சரிவு ஆனையிறவு, பளையையும் தாண்டி, முகமாலை வரை வந்ததும் - தெரிந்த சங்கதிகள்.

ஆகவே சரத் முனசிங்கவின் அறிவிப்புகளுக்கு மக்கள் அதிகம் மதிப்புக் கொடுக்கப்போவதில்லை என்பது தெளிவு - 'ஜெயசிகுறு' குறித்து உண்மையாகவே அவர் உண்மைகளை வெளியிடும் இந்தச் சந்தர்ப்பத்திலும் கூட.

# தேர்தல் கண்காணிப்பாளர் கடத்தப்பட்டுத் தாக்கப்பட்டார்!

## கோண்டாவில் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம்,டிசெ.6

கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிப்பைக் கண்காணிக்கும் பணியில் ஈடுபட்ட யாழ். பல்கலைக் கழக முகாமைத்துவபீட மாணவனான எஸ்.பிரபாகர் நேற்று முற்பகல் இனந் தெரியாதவர்களால் கடத்தப்பட்டு நையப்புடைக்கப்பட்ட பின் விடுவிக்கப்பட்டார்.

அந்த வாக்களிப்பு நிலையத்தில் முறைகேடாக வாக்குகளைச் செலுத்த கட்சி ஒன்றின் ஆதரவாளர்கள் பல தடவை முயன்றபோதும் பிரஸ்தாப கண்காணிப்பாளர் அதைத் தடுக்க முற்பட்டதாகவும் -

அதன் விளைவாகவே பின்னர் அப்பகுதியில் வைத்து அந்த இளைஞர் வான் ஒன்றில் வந்தவர்களால் கடத்திச் செல்லப்பட்டு நகரில் கட்சி அலுவலகம் ஒன்றில் வைத்து கடுமையாகத் தாக்கப்பட்டதாகவும் - கூறப்படுகிறது.

தேர்தல் வன்செயல் கண்காணிப்பு நிலையத்தின் கண்காணிப்பு பணியில் இவர் ஈடுபட்டிருந்தார்.

தாக்கப்பட்ட இளைஞர் பின்னர் குருநகர் திருக்குடும்ப மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். (ஐ-6-9-10-173-180)

### மூதூரில் உற்சாகமான வாக்களிப்பு

மூதூர்,டிசெ.6

மூதூர் கிழக்கு வாக்காளர்கள் உற்சாகத்துடன் வாக்களித்தனர். கட்டுப்பாடற்ற பகுதியைச் சேர்ந்த இந்த வாக்காளர்கள் அல்ஹிதாய மகாவித்தியாலய இணைப்பு வாக்களிப்பு நிலையத்துக்கு குறிப்பிட்ட நேரத்துக்கு முன்னரே வந்திருந்தனர்.

பெருந்தொகையான வாக்காளர்கள் கட்டைபறிச்சான் இராணுவ சோதனைச்சாவடியைக் கடந்து சென்றனர். பெருந்தொகையானோர் வரிசையில் காத்திருந்தும் குறிப்பிட்ட நேரத்துக்கு 15,20 நிமிடங்கள் கழிந்த பின்னரே வாக்களிப்பு ஆரம்பிக்கப்பட்டது.

காலை 8.30 மணியளவில் சுமார் 40 வீத வாக்காளர்கள் வாக்களிக்க வந்துவிட்டதாக மதிப்பிடப்பட்டது.

கடந்த காலங்களில் மூதூர் கிழக்கு வாக்காளர்கள் வாக்களிப்பில் அவ்வளவாக ஆர்வம் காட்டியதில்லை. (ஐ)

### வவுனியாவில் நால்வர் கைது!

வவுனியா,டிசெ.6

வவுனியாவில் இரண்டு தமிழ்க் கட்சிகளின் ஆதரவாளர்கள் நால்வர் நேற்று பெருமளவான வாக்காளர் அட்டைகளுடன் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு வவுனியா மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

வவுனியா மாவட்ட நீதிவான் எம். இளஞ்செழியன் முன்னிலையில் இவர்கள் நால்வரும் தமது குற்றங்களை ஒப்புக்கொண்டதையடுத்து நீதிவான் நால்வருக்கும் 2வார சிறைத் தண்டனையும் தலா 500 ரூபா தண்டப் பணமும் விதித்தார்.

நால்வரும் உடனடியாக அனுராதபுரம் சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். (ஐ-4-164)

### சோமவன்ஸ பறந்தார்

கொழும்பு,டிசெ.6

மக்கள் விடுதலை முன்னணித் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க நேற்று முற்பகல் லண்டன் பயணமானார். வாக்களிப்பு நடைபெற்றுக் கொண்டிருந்தவேளையிலேயே இவர் நாட்டை விட்டு வெளியேறினார். சில தினங்களுக்கு முன்னரே இலங்கை வந்திருந்த அவர், தேர்தல் பிரசாரங்களிலும் ஈடுபட்டார். (ஐ)

### நாளை

கார்த்திகை 22
வெள்ளிக்கிழமை
திதி : ஸப்தமி
பிற்பகல் 4.00 வரை.
நட்சத்திரம் : மகம்
பிற்பகல் 12.39 வரை.
சுபநேரம் : 6.17 - 7.47
ராகுகாலம் : 10.47 - 12.17
(பழைய நேரப்படி)

## நாட்டு நடப்பு

**மேடைப் பேச்சு காற்றோடு போச்சு!**

சூறாவளித் தேர்தல் புயல் ஓஞ்சு போச்சு
சுவர்களில் ஒட்டியது கரைஞ்சு போச்சு
வீறான மேடைப் பேச்சு காற்றோடு போச்சு
விழுந்து கை கூப்பியதும் நின்று போச்சு
வேறான சுலோகங்கள் மறந்து போச்சு
வீணான அடிபிடியும் நின்று போச்சு (?)
சீராக மக்களும் கீறிய அந்தச்
சிறுதுண்டும் பெட்டிகளில் போட்டாச்சு
ஆராத காதலுடன் போட்ட துண்டு
அடுக்கடுக்காய்க் கட்டி வந்துமாச்சு
சீராக அவற்றை உடைத்து எண்ண
சிறப்பான வரலாற்றை அவை இயம்பும்.

- *விகடகவி.*

# காரைநகருக்கு வாக்காளரை ஏற்றிச்சென்ற லொறி மீது சூடு!

காரைநகர்,டிசெ.6

காரைநகரை நோக்கி வாக்காளர்களை ஏற்றிச்சென்ற தனியார் லொறி ஒன்றின்மீது நேற்றுக்காலை சங்கானைப் பகுதியில் வைத்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.

இடம்பெயர்ந்து சங்கானை, சித்தன்கேணி, வட்டுக்கோட்டைப் பகுதிகளில் வசிக்கும் காரைநகர்ப் பகுதி வாக்காளர்கள் பெரும் எண்ணிக்கையானோர் அந்த லொறியில் இருந்தனர்.

'பிக்கப்' வாகனம் ஒன்று அந்த லொறியை வழிமறித்ததை அடுத்து அதிலிருந்த ஆயுதபாணிகள் லொறியின் சக்கரங்களை பிஸ்டலால் சுட்டுச் சேதப்படுத்தினர்.

இதனால் கலவரமடைந்த வாக்காளர்கள் லொறியைவிட்டு அவசரமாக இறங்கமுற்படவே பெரும் நெரிசல் ஏற்பட்டது. லொறியின் மேல்தட்டில் இருந்தோர் குதித்து தப்பி ஓடினர். இந்தக் களேபரத்தில் காரைநகரைச் சேர்ந்த செல்லையா லக்ஸ்மி (வயது 65) என்ற பெண்ணின் கால் முறிந்தது. அவர் சிகிச்சைக்காக யாழ்.ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

லொறி மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தவர்கள் பின்னர் கட்சி ஒன்றின் ஆதரவாளர்களால் துரத்திச் செல்லப்பட்டு வேறு ஓர் இடத்தில் வைத்து மடக்கிப் பிடிக்கப்பட்டதாக அறியவந்தது. அவர்களிடமிருந்து ஆயுதங்கள் பறிக்கப்பட்டு படையினரிடம் ஒப்படைக்கப்பட்டன.

இதேவேளை -

கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது காரைநகர்ப் பகுதி மக்களில் பெரும்பாலானோர் நேற்று வாக்களிப்பில் பங்குபற்றியதைக் காணமுடிந்தது.

யாழ்நகர் உள்ளிட்ட வெளி இடங்களில் இருந்து காரைநகரைச் சொந்த இடமாகக் கொண்ட சுமார் இரண்டாயிரம் பேர் வாக்களிப்பதற்காக காரைநகருக்கு நேற்று வருகை தந்திருந்தனர். இவர்கள் கொட்டும் மழைக்கு மத்தியில் காரைநகருக்குச் செல்வதற்காக பாஸ் அனுமதி பெறுவதற்கு பொன்னாலைச் சந்தியில் உள்ள கடற்படை முகாமில் நீண்ட வரிசையில் காத்துநின்றதைக் காண முடிந்தது.

வாக்களிப்பில் கலந்துகொள்வதற்காக மக்கள் தமது சொந்த வாகனங்கள் மற்றும் வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்களில் வருகை தந்தனர். (ஐ-72-6-139)

## நாடு முழுவதும் நேற்றிரவு ஊரடங்கு

கொழும்பு,டிசெ.6

நாடு முழுவதும் நேற்றிரவு 9.30 மணி தொடக்கம் இன்று காலை 6 மணி வரை ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டிருந்தது.

நடைபெற்று முடிந்த 12ஆவது நாடாளுமன்றப் பொதுத் தேர்தலை அடுத்து நாடளாவிய ரீதியில் அசம்பாவிதங்கள், மோதல் சம்பவங்கள் இடம்பெறாமல் தடுப்பதற்காகவே ஊரடங்குச் சட்டம் அமுல் படுத்தப்பட்டதாக அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ஐ-6-4-9)

### துன்னாலையில் மாணவன் கடத்தப்பட்டான்

வடமராட்சி கிழக்கு,டிசெ.6

துன்னாலைப் பகுதியில் வாக்களிப்பு நிலையம் ஒன்றில் கட்சி ஒன்றின் முகவராகச் செயற்பட்ட மாணவர் ஒருவர் நேற்று மாலை வாக்களிப்பு முடிந்த கையோடு கடத்தப்பட்டிருக்கிறார்.

காசிநாதர் வித்தியாலய வீதியில் வைத்து இனந்தெரியாத ஆயுதபாணிகள் இந்த மாணவனை வாகனத்தில் ஏற்றிக் கடத்திச் சென்றதாகக் கூறப்படுகிறது.

கடத்தப்பட்ட மாணவன் துன்னாலைப் பகுதியைச் சேர்ந்த கிராம அலுவலர் ஒருவரின் மகன் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-182)

### திருமலை நகரில் சுமாரான வாக்களிப்பு

திருகோணமலை,டிசெ.6

திருகோணமலை மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி வாக்காளர்கள் அரசுக் கட்டுப்பாட்டுப் பகுதியில் வாக்களிக்க வசதி செய்யப்பட்டிருந்தது. ஆயினும் படையினரின் சோதனை காரணமாக சிறு தொகையினரே வாக்களித்தனர்.

இளம் வயதுடையவர்கள் நகருக்குள் செல்ல அனுமதிக்கப்படவில்லை. நகரில் வாக்களிப்பு சுமாராக இருந்தது. நண்பகல் வரை 40 சதவீத வாக்களிப்பு நடந்ததாக தேர்தல் அதிகாரிகள் தெரிவித்தனர். நகரப் பகுதியில் பலத்த பாதுகாப்புக்கள் செய்யப்பட்டிருந்தன. (ஐ)

### புத்தளத்தில் பெண்கள் பெருமளவு வாக்களிப்பு

புத்தளம் பகுதியில் வாக்களிப்பு அமைதியாக இடம்பெற்றது. காலை வேளையில் மந்தமாகக் காணப்பட்ட வாக்களிப்பு பகல் வேளையில் சுறுசுறுப்பாக நடைபெற்றது.

முஸ்லிம் பெண்கள் நோன்பு நோற்றவர்களாக நீண்ட வரிசைகளில் நின்று வாக்களித்தனர்.

நேற்று முன்தினம் இரவு ஆனமடுவ பகுதியில் இடம்பெற்ற கைக்குண்டு வீச்சில் பொது மக்கள் ஐக்கிய முன்னணி ஆதரவாளர் மூவர் காயமடைந்தனர்.

புத்தளம் வெளிப்புறவட்ட வீதியில் பொது மக்கள் ஐக்கிய முன்னணி ஆதரவாளர் ஒருவரின் வீட்டின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்த இனந்தெரியாத நபர்கள் சுமார் 50 ஆயிரம் ரூபாய் பணத்தையும் கொள்ளையிட்டுச் சென்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)



இது வாக்களிப்பதற்காக வந்த மக்கள் கூட்டம் அல்ல. யாழ்.நகரில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் பெற்றோல் பெறுவதற்காக மோட்டார் சைக்கிள்களுடன் காத்துநின்றோரின் நீண்ட வரிசையே இது. குடாநாட்டில் எரிபொருள்களுக்கான தட்டுப்பாடு நீடிக்கிறது.

(படம் : பொ. இராஜேஸ்வரன்)

## வன்னியிலும் கிழக்கிலும் நேற்று

# புலிகளின் பிரதேசத்தைச் சேர்ந்தோர் வாக்களிப்பதை ராணுவம் தடுத்தது!

## சோதனைச்சாவடிகள் மூடப்பட்டதால் ஏமாற்றம்

வவுனியா,டிசெ.6

பொதுத் தேர்தல் தினமான நேற்று வடக்கு - கிழக்கில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட வாக்காளர்கள் வாக்களிக்க முடியாமற் போனது. புலிகளின் பிரதேசங்களைச் சேர்ந்த இந்த வாக்காளர்கள் வாக்களிக்க ராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வருவதை ராணுவம் சோதனைச்சாவடிகளை மூடித் தடுத்துவிட்டது.

அரசின் இச்செயலுக்கு தமிழ் அரசியல்வாதிகள் கடும் ஆட்சேபத்தை தெரிவித்துள்ளனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி உபதலைவர் வீ.ஆனந்தசங்கரி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், பொன் செல்வராசா, ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் தேர்தல் ஆணையாளரிடமும், மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளிடமும் கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.

தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்புக்கு அளிக்கப்படும் வாக்குகளைக் குறைப்பதற்கு அரசாங்கமும் அதன் அடிவருடிகளும் செய்த சதி முயற்சி இது என்று ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

பல பொது அமைப்புகளும், சுயாதீன கண்காணிப்பு நிறுவனங்களும் கூட அரசின் இந்தச் செயலைக கடுமையாக விமர்சித்துள்ளன.

இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களைச் சேர்ந்தோருக்கு வாக்களிக்க மீண்டும் ஒரு சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும் என்று சில கட்சிகள் கேட்டுள்ளன.

வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து வந்த பல்லாயிரக்கணக்கான வாக்காளர்கள் பிரமனாலங்குளம் சோதனைச் சாவடி மூடப்பட்டதால் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

இவர்களுக்கான வாக்களிப்பு நிலையங்கள் வவுனியாவில் அமைக்கப்பட்டு, அங்கு வாக்களிக்க வசதி செய்யப்பட்டிருந்தது.

இதேபோன்று கிழக்கில் செங்கலடி கறுத்தப்பாலம், கிரான் பாலம், வவுணதீவுப் பாலம், மாங்கேணி ஆகிய சோதனைச்சாவடிகள் வாக்காளர் வராதபடி இராணுவத்தினரால் மூடப்பட்டன.

பிரமனாலங்குளம் சோதனைச் சாவடி மூடப்பட்டதால் வன்னியில் சுமார் 65ஆயிரம் வாக்காளர்கள் வாக்களிக்க முடியாமற்போனது. மட்டக்களப்பு மாவட்ட சோதனைச்சாவடிகள் மூடப்பட்டதால் 45 ஆயிரத்துக்கு மேற்பட்ட வாக்காளர்கள் வாக்களிப்பது தடுக்கப்பட்டது.

இந்த வாக்காளர்களுக்கான வாகளிப்பு நிலையங்களை இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் அமைத்து, அங்கு அவர்கள் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகளை தெரிவத்தாட்சி அதிகாரிகளான மாவட்ட அரச அதிபர்கள் மேற்கொண்டிருந்தனர். ஆனால் நேற்றுக்காலை வாக்களிப்பு ஆரம்பமாவதற்கு முன்னரே - காலை 7மணிக்கு முன்பாக - சோதனைச் சாவடிகள் மூடப்பட்டுவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. சோதனைச்சாவடிகள் மூடப்பட்டது குறித்துப் பாதுகாப்பு அமைச்சு விளக்கம் அளித்திருக்கிறது.

வன்னி மற்றும் மட்டக்களப்பு பிரதேசங்களுக்குள் வாக்காளர்கள் என்ற போர்வையில் ஊடுருவி தேர்தலைக் குழப்புவதற்கு புலிகள் திட்டமிட்டிருந்ததாகத் தகவல் கிடைத்ததை அடுத்தே நேற்று சோதனைச் சாவடிகள் அனைத்தும் மூடப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு விடுத்த ஓர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (ஐ-ஒ-164-4-6-9)

## தொகுதி ரீதியாக மேலும் சில முடிவுகள்

இன்று அதிகாலைவரை வெளியான தேர்தல் முடிவுகளின்படி தொகுதிரீதியாக கட்சிகளின் நிலைவரம் வருமாறு:-

### பதுளை மாவட்டம்

**பதுளை**

★ ஐ.தே.க. - 16,240
★ பொ.ஐ.மு. - 12,518
★ ஜே.வி.பி. - 2,852
★ சுயேச்சை - 3 - 817

**ஹாலிஎல**

★ ஐ.தே.க. - 20,757
★ பொ.ஐ.மு. - 15,137
★ ஜே.வி.பி. - 2,775
★ சுயேச்சை - 3 - 872

**அப்புத்தளை**

★ ஐ.தே.க. - 22,114
★ பொ.ஐ.மு. - 12,340
★ ஜே.வி.பி. - 1,729
★ சுயேச்சை - 3 - 575

**பசறை**

★ ஐ.தே.க. - 20,490
★ பொ.ஐ.மு. - 12,174
★ ஜே.வி.பி. - 1,485

**பண்டாரவளை**

★ ஐ.தே.க. - 25,750
★ பொ.ஐ.மு. - 17,710
★ ஜே.வி.பி. - 3,319
★ சுயேச்சை - 7 - 592

**ஊவாபரணகம**

★ ஐ.தே.க. - 20,496
★ பொ.ஐ.மு. - 16,287
★ ஜே.வி.பி. - 2,772

### இரத்தினபுரி மாவட்டம்

**நிவித்திகல**

★ பொ.ஐ.மு. - 28,833
★ ஐ.தே.க. - 26,220
★ ஜே.வி.பி. - 2,756

**எஹெலியகொட**

★ ஐ.தே.க. - 27,594
★ பொ.ஐ.மு. - 26,773
★ ஜே.வி.பி. - 4,448
★ சிஹல உறுமய - 259

### மாத்தளை மாவட்டம்

**இரத்தோட்டை**

★ ஐ.தே.க - 28,088
★ பொ.ஐ.மு. - 20,506
★ ஜே.வி.பி. - 3,179
★ புதிய இடதுசாரி.மு - 453

### நுவரெலியா மாவட்டம்

**கொத்மலை**

★ ஐ.தே.க. - 29,549
★ பொ.ஐ.மு. - 14,421
★ ஜே.வி.பி. - 1,508

### அனுராதபுர மாவட்டம்

**ஹெக்கிராவ**

★ ஐ.தே.க. - 22,853
★ பொ.ஐ.மு. - 17,088
★ ஜே.வி.பி. - 3,354
★ புதிய இடதுசாரி.மு - 412

### பொலநறுவை

**மெதிரிகிரிய**

★ ஐ.தே.க. - 24,450
★ பொ.ஐ.மு. - 19,149
★ ஜே.வி.பி. - 4,355
★ புதிய இடதுசாரி.மு. - 416

## வவுனியா மாவட்ட நிலைவரம்

வவுனியா,டிசெ.6

இன்று அதிகாலை கிடைத்த உத்தியோகப்பற்றற்ற பெறுபேறுகளின்படி வவுனியா மாவட்டத்தில் கட்சிகள் பெற்ற வாக்குகளின் எண்ணிக்கை விவரம் வருமாறு:-

★ த.வி.கூ. - 41,005
★ ஐ.தே.க. - 10,710
★ புளொட - 9,357
★ பொ.ஐ.மு. - 7,016
★ ஈ.பி.டி.பி. - 2,906

(ஐ-164)

## குருநாகலில் கடைகளுக்குத் தீ!

கொழும்பு,டிசெ.6

குருநாகல் மாவட்டத்தில் மல்ஸ்ரீபுர பகுதியில் அமைந்திருந்த கடைத் தொகுதிகள் நேற்று நள்ளிரவு தீப்பற்றி எரிந்ததாக அறிவிக்கப்படுகிறது.

தீ பரவியதற்கான காரணங்கள் உடனடியாகத் தெரியவரவில்லை. இன்று அதிகாலை வரை பல கடைகள் தொடந்து எரிந்துகொண்டிருந்ததாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன. (ஐ-ஒ)

## அலரிமாளிகையில் பிரதமர் வாக்களிப்பு

கொழும்பு,டிசெ.6

வாக்களிக்கச் செல்லும் சமயத்தில் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயககவைப் படுகொலை செய்யத் திட்டமிட்டிருப்பதாகத் திடீரெனக் கிடைத்த தகவலை அடுத்து நேற்று அவர் அலரி மாளிகையில் இருந்தவாறே தனது வாக்கைச் செலுத்தினார்.

பிரதமரைப் படுகொலை செய்ய விடுதலைப் புலிகளின் தற்கொலைக் குண்டுதாரி ஒருவர் தயாராக இருப்பதாகவும் -

வாக்களிக்க செல்லும்போது இந்த தாக்குதல் இடம்பெறலாம் என்றும் - இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் எச்சரிக்கை செய்ததை அடுத்தே இந்த விசேட ஏற்பாடு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. (ஐ-6-4-9)

## தபால் வாக்களிப்பிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய இடதுசாரி மு. - 16
முஸ்லீம் காங்கிரஸ் - 2
ஜே.வி.பி. - 2
நிராகரிக்கப்பட்டவை - 46

வவுனியா மாவட்ட தபால் வாக்களிப்பு முடிவுகள் வருமாறு:-

த.வி.கூட்டணி -1,162
பொ.ஐ.மு. - 771
ஈ.பி.பி.டி.பி. - 61

மட்டக்களப்பு மாவட்ட தபால் வாக்களிப்பு முடிவுகள் வருமாறு:-

த.வி.கூட்டணி - 1987
ஐ.தே.க. - 665
பொ.ஐ.மு. - 391
ஸ்ரீ.மு.காங்கிரஸ் - 344
ஈ.பி.டி.பி. - 50

திருகோணமலை மாவட்ட தபால் மூல வாக்களிப்பு முடிவுகள் வருமாறு:-

ஐ.தே.க - 2,570
பொ. ஐ.மு. - 1,745
த.வி.கூ. - 1,289
ஜே.வி.பி. - 49

## மட்டக்களப்பு...

* (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தைக் கைப்பற்றும் நிலையில் இருந்தது.

எஞ்சிய ஓர் ஆசனமும் பொ.ஐ.மு. சார்பில் போட்டியிட்ட முன்னாள் பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லாவுக்கே கிடைக்கும் நிலை உள்ளது.

இன்று அதிகாலை கிடைத்த தகவல்களின்படி அங்கு கட்சிகள் பெற்றிருந்த வாக்கு நிலைவரம் வருமாறு:-

★ த.வி.கூ. - 65,000
★ ஸ்ரீ.மு.காங்கிரஸ் - 25,000
★ பொ.ஐ.மு. - 23,000
★ ஐ.தே.க. - 19,000

(ஐ-4-6-9)

## 2மணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குருநாகல் மற்றும் தென்னிலங்கையின் சில பகுதிகளில் வாக்களிப்பை அடுத்து நேற்றிரவு இடம்பெற்ற வன்செயல்களைத் தொடர்ந்தே ஊரடங்குச் சட்டத்தை நீடிக்க முடிவு செய்யப்பட்டதாக அறியவந்தது.(ஐ)

*(முன்னர் வந்த செய்தி ஏழாம் பக்கத்தில்.)*


**மலிவு விலையில் கணனிகளும் உதிரிப்பாகங்களும்**

புத்தம் புதிய CD கள்(650 MB / 700 MB), பழைய — புதிய தமிழ்,சிங்கள,ஆங்கில, ஹிந்திப் பாடல்கள் அடங்கிய MP3 CD கள், சகல வகையான Cartridges இற்கும் Ink Refilling, கணனிகளிற்கு உபயோகிக்கும் Ink Jet Papers, Photo Quality Papers, File Holder, Net2Phone Machines விற்பனைக்கு உண்டு.

Pentium - III Celeron



PC SYSTEMS
Jaffna Road, Manipay
(Front of St.Annes Church)
CUSTOMER SUPPORT : 021 – 2556



Pentium - IV Cyrix



**உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு**

**இலவச கணனிப் பயிற்சி**

இப்பயிற்சி வருடாந்தம் யுனிவக் கணனித் தகவல் தொழில்நுட்ப நிறுவனம் ஊடாக வழங்கப்படுகின்றது. கடந்த மூன்று ஆண்டுகளாக 250 Rank இற்கு உட்பட்ட 1000 மாணவர்களுக்கு மட்டுமே இப்பயிற்சிநெறி வழங்கப்பட்டது.

இந்த ஆண்டு பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில் 2000 மாணவர்களுக்குப் பயிற்சி வழங்கப்படவுள்ளதால் உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த சகல மாணவர்களும் விண்ணப்பங்களை மேற்கொள்ளவும். (2000இற்குக் கூடுதலான விண்ணப்பங்கள் கிடைக்குமாயின் அவற்றுள் பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில் முதல் 2000 மாணவர்களுக்கு இலவசமாகவும் ஏனைய மாணவர்களுக்கு 20% கட்டணத்துடனும் பயிற்சிநெறி வழங்கப்படும்.)

**விண்ணப்ப முடிவு திகதி :- 15-12-2001**

(95646)

UNIVAC College of Computer Information Technology

Head Office: 3201, K.K.S. Road, Jaffna.
Branch: Atchuvely, Uduvil.





உங்கள் எதிர் காலத்திற்கு வாக்களிப்பு !

OK

உங்கள் குழந்தையின் எதிர் காலத்திற்கு ?

ஆம்.

இந்த இனிய விருமுறையை அவர்களிற்கு ஓர் கணனிக் கல்வியை வழங்குவதன் மூலம் ஆரம்பியுங்கள். உங்களைப் போல் சுட்டியான குழந்தைக்கு நீங்கள் வேறெதுவும் வழங்கத் தேவையில்லை. இவர்களிற்கென எம்மால் விசேடமாக நெறிப்படுத்தப்படுவதே

baby.com

பதிவுகளிற்கும் மேலதிக விபரங்களிற்கும் 07-12-2001 வெள்ளிக்கிழமை பகல் 10.00 மணிக்கு முன்

Director

STP Computer World (Pvt.) Limited.
54A, Palaly Road, Kantharmadam, Jaffna
T.P: 2674, E.Mail: baby.com@sltnet.lk


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.12.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.